உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை க. | காரைக்குடி துந்துபிஹு ஐப்பசிமீ | மணி ௪.

வணக்கம்.

முருகக்கடவுள்.

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி.

—கச்சியப்ப சிவாச்சாரியர்.

சிவபெருமான்.

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாட ரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

—திருமாளிகைத்தேவர்.

சுந்தரர்,

பாராரும் பைந்தமிழாற் பரனடிக்கே பண்ணாரும் பதிகம் பாடிப்
போராரும் பெருமானுக் காளாகி யவர்தந்த பீடார் பொன்பெற்று
வாரு மாற்றிலிட்டுக் குளத்தெடுத்தே யதைப்பின்னு மினிய வன்பின்
நேராரும் பரவையகம் புக்களித்த சுந்தரன்றாள் நினைதல் செய்வாம்.

—திருநெல்வேலிப் புராணம்.

குமரன்.

பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

இத்திருவாக்கியம் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய்மலர்ந் தருளிய தேவாரம்—மூன்றாந் திருமுறை—கோயில் பெரிய திருத் தாண்டகம்—"அரியானை" எனும் தொடக்கத்துச் செய்யுள் முதல், "காரொளிய" எனும் இறுதிச் செய்யுள் ஈறாகவுள்ள பத்துப் பாக் களின் இறுதியடியாக இருப்பது. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தில் இத்தகைய அருமைத் திருவாக்குகள் பலவுள. அவைகளை உள்ளம் உருக ஓதுவார்க்கு, அவைகளில் ஆழ்ந்த பொருள்கள் பல தனிசிறந்து விளங்கும் அருமை புலனாகும். அவ்வாறே, இவ்வாக்கியத்திலும் ஆழ்ந்த பொருள்கள் பல உள. இவ்வாக்கியத்தில், "பேசாத நாளெல்லாம்; பிறவா நாளே." என இரண்டு தொடர்கள் இருக்கின்றன. ஒருவாறாக ஒவ்வொரு தொடரின் உள்ளுறைப் பொருளையும் விளக்கும் வகையால் இக் கட்டுரையை முற்றுவிக்கலாம். இவ்விரு தொடர்களையும் ஆராயும் பொழுது, "பேசுதல் என்பது என்ன? பிறவாத நாளாவதியாது? எப்பொருளைப்பற்றிப் பேசுதல் வேண்டும்? ஏன் பேசுதல் வேண் டும்? எவ்வாறு பேசுதல் வேண்டும்?" என்ற கேள்விகள் பிறக்கும்.

"பேசுதல்" எனுஞ் சொல்லின்பொருள், "மனத்தகத்தே உள்ள எண்ணத்தை நாவினால் பிறருக்கு வெளிப்படுத்துதல்" என்பதாகும். பேசுதலாவதியாது? செல்வரைப் பின்சென்று சங் கடம் பேசுதலோ? கொடுக்கிலாதானைப், "பாரியே!" என்று கூறு தலோ? கல்வி அறிவிலாக்கயவரைக், "கல்விக்கடலே!" எனக்கழறு தலோ? வேம்பினைப்பேசி விடக்கினை யோம்பும் வினைரைக், "கரும் பினுமினிய காமதேனுவே!" என்றியம்புதலோ? நல்லோரை வாய் குளிரப்பேசி வசைமாலை தொடுத்தலோ? வாதுக்குச் சண்டைக்குப்

போய் வழக்குப் பேசுதலோ? ஊர்வம்பு அளத்தலோ? கொன்றுந் தொன்றென்று பல்காலும் பன்னிக்கொண்டிருத்தலோ? "தினைத் தனைபோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப் பொருளென்று மிகவுன்னி, மதிபாவித்த அனைத்துலக மாளலாம்" என்று விஸ்தாரம் பேசுதலோ? மாடமாளிகை மனைவி மக்களைப்பற்றி மகிழ்ந்து பேசுதலோ? பணங்காசைப்பற்றிப் பரிந்து பேசுதலோ? அன்று. அன்று. பின்னை என்கொல்? பேசுதலாவது, எல்லாம் வல்ல இறைவனைப் புகழ்ந்து பேசுதலேயாம். மற்றும் அவருக்குப் பாமாலைகளை அணிவித்தல், நன்மொழிகளை அருச்சித்தல், அவர் குணநலங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தல், அவைகளைத் தெளிந்தெடுத்துச் சொற்பெருக்கிடுதல் முதலிய யாவும் அப்பெருமானைப் பற்றிப் பேசும் பேச்சுக்களேயாம்.

இனி இப்பூவுலகில் வினைவசத்தாற் பிறந்துள்ள நாம், நம்மைப் படைத்து அழித்து அளிக்கும் பரமகருணாநிதியாகிய அப்பரமேஸ்வரனைப் பரிந்து பாடுதலல்லது, அவர் திருவடி நீழலையடைதல்—முத்திப்பேறுபெறுதல் அரிதாகும். ஆதலால் நாம் இவ்வுலகில் பிறந்து இகபோகங்களைத் துய்த்துக்கொண்டிருக்கும் நாள்களுள், அவரைப்பற்றிப் பேசாத நாட்கள் எல்லாம் பிறவாத நாட்கள்—வீண் நாட்கள் ஆம். ஏனெனில் பிறவிப்பயனைப்பெறாத அந்நாட்களுக்குப்பதிலாக, நாம் பின்னர் பிறந்து நம்பெருமானைப் புகழ்ந்துபேசி, நமது பிறவிப்பிணியைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய கடன் நாட்களாகும். இதனால், "பெருமானைப் பற்றிப்பேசும் பேச்சுப், பிறவிப்பிணியை நீக்கவல்லபெருமருந்து" என்பதுபெறப் படுகின்றது. இவ்வாறு பேசிப் பயன்றுய்க்காது, வீணாகக் கழிக்கப்பெறும் நாட்கள் பெருஞ்சுமையாக நின்று நம்மைப் பிறவிக் குழியில் அமிழ்த்துந் தகையனவாதலால், அவரைப்போற்றாத அந்நாட்களெல்லாம் போற்றப்பெறாத நாட்களேயாம். இதனாலேயே, "போற்றாதே யாற்ற நாள் போக்கினேனே." என்று நவில்கின்றார்கள் நமது நாவுக்கரசடிகள்.

ஒரு காலத்தும் அழிவில்லாத உண்மைப் பொருளாகிய அவ்விறைவனைப்பற்றிப் பேசும் பேச்சே பேச்சாகும். மற்ற அநீதியுந்

தகையனவாகிய பொய்ப்பொருள்களைப்பற்றிப் பேசும் பேச்சுக்கள் எல்லாம் சிறப்பாகச் சிறுமை இன்பத்தையும், பொதுவாகப் பெரிதும் துன்பத்தையுமே தருதலால் பயனில்லாதனவாம். இதனாலேயே, "பெரியானைப் பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே." என்று திருநாவுக்கரசு சுவாமிகளும், "பெற்றொன்றேறும்பிரானைப் பேசாதார் பேச்சென்னே!; பெண்ணணைப பிரானைப்பேசாதார் பேச்சென்னே!" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும், "ஆறாத தியாடியாமாத்தூ ரம்மானைக், கூறாத நாவெல்லாங் கூறாத நாக்களே." என்று திருஞானசம்பந்தப் பெருமானாரும் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

எல்லாம் வல்ல இறைவனைப் புகழ்ந்து பேசப்பேச, நமக்கு மெய்ப்பொருளாகிய அவ்விறைவன் தன்மையும், மற்ற பொய்ப் பொருள்களின் புன்மையும் இனிது புலனாம். அவன் புகழாகிய பொன்மொழிகளை, நமது இன்பத் தேன்மொழியாம் தென்மொழியால் உரைக்குந்தோறும் உரைக்குந்தோறும் நமது உளவாவியில் உவகைபொங்க உண்மைஞானவல்லி முளைத்துவளர்ந்துமுறுகியதாம். அன்பு அரும்பும். எல்லையிலா இன்பம் மலரும். நறு மணங் கமழும் அப்புது மலரில், பொன்னொளி திகழும் பொதுவில் நடமாடும் பூங்கழல் பொலிந்து தோன்றி, அண்ணிக்கும் ஆனந்தத்தேன்சொரிந்து, முத்திச் செல்வமாம் முதிர் சுவை யளிக்கும். இதனாலேயே நமது மாணிக்கவாசகப் பெருமானாரும், "பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான் உன்னாமங்கள் பேசுவார்க்கு, இணக்கிலாததோ ரின்பமே வரும்." என்றருளியதூஉம். மற்றும், நமது நா அவன் நாமங்களை நன்கு பயின்றுவிடுமாயின், மறந்தும் மற்ற தியகாரியங்களைப் பற்றிப்பேசாது; எப்பொழுதும் அவ் விறைவனைப் பற்றியே பேசும். கனவிலாயினும் நனவிலாயினும், பகலிலாயினும் இரவிலாயினும், என்ஞான்றும், நமது மனத்தகத்தே நிகழும் நிகழ்ச்சிகள் எல்லாம் இறைவனைப் பற்றியனவாகவே யிருக்கும். நமது கருத்தெல்லாம் கடவுளைக்காண்டலிலேயே செல்லும். நாம் ஆராய ஆராய, நமது ஐயங்கள் எல்லாம் நீங்கும். அவர்பால் அன்பு அதிகரிக்கும். அதனால் அவர் இணையார் திருவடி

நீழலையடைந்துய்யலாம். அவ்விறைவன் தம்மைப் புகழ்ந்து பேசுவார் பாற் பெருங்கருணை செலுத்துபவர். பேசப்பேசப் பெரிதும் இனிக்கும் பேரின்பப் பொருளாயுள்ளவர். இதனாலேயே, "பேசப் பெரிதுமினியாய் நீயே!" என்று நமது நாவுக்கரசடிகள் நவில்கின்றார்கள். நமது மனிதப்பிறவியின் பயன், அவர் நாமங்களை நாவார நவிலுதலும், அவர் புகழை வியந்து பாடுதலுமேயாகும். இதனாலேயே, "ஆலவாயுடையார் புகழ்பாடப் பெறுவேமேல் வேண்டுவதெம் மனிதயாக்கை." என்று நமது பரஞ்சோதி முனிவரும் பகர்ந்திருக்கின்றார். மற்றும்,

> என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
> முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
> மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
> பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.

என்று நமது திருஞானசம்பந்தப் பெருமானாரும் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார்கள். இனி, "ஏன் பேசுதல் வேண்டும்?" என்ற கேள்விக்கு நமது நாவுக்கரசடிகள் அப் பத்துப் பாக்களிலும் பகரும் காரணங்களுட் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுவாம்:—அரியான்—பெரியான்—அந்தணர்தஞ்சிந்தையான்—அற்றார்க்கும்அலந்தார்க்கும்அருள்செய்வான்—மற்றொருந் தன்னொப்பாரில்லாதான்—வானவர்கள் எப்பொழுதும் வணங்கி ஏத்தப் பெற்றான்—பெருந்தகை—அருந்துணை—அடியார்தம் அல்லல் தீர்க்கும் அருமருந்து—கனவயிரக் குன்றனைய காட்சியான்—ஆரேனும் அடியவர்கட் கணியான். இப் பொன்மொழிகளை, நமது நாவாகிய உரைகல்லில் உரைத்து, அகக்கண்ணாற் பார்த்துக், கருத்தால் தெரிந்து தெளியின், இவைகளின்மாற்று இனிது புலனாம். இவைகளுக்கு உரை வரையப்புகின், ஒவ்வொன்றும் ஒவ்வொரு கட்டுரையாக விரியுமாதலால், விரிவஞ்சி விடுக்கின்றோம். நமது நாவுக்கரசடிகள், கடவுளை நாத்தழும்புறப் பேசிப் பேசித் தொழுதபெரியார். "பெருமானைப் பேசும் நாட்களே பிறந்த நாட்கள்." என்று பேச்சளவில் நின்றுவிடாது, செய்கையிலும் நாமுய்யும் வண்ணம் நடந்துகாட்டிப், பிறவாநெறிப் பெருஞ் செல்வப்பேறு பெற்ற சிவஞானப்

பெருஞ்செல்வர். இதனை அவர்களே, "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்; உன்னாமம் என்னாவின் மறந்தறியேன்; தண்மதிக் கண்ணியினானைத் தையனல்லாளொடும் பாடி, உன்மெலி சிந்தையறாகி உணராவுருகா வருவேன்; ஆராவமுதே யென்னையாறனே யென்றென்றே நாணாற்றி னைகின்றேனே; ஆநா வென்றென்றே யலறுகில்லேலே; கற்பகமே யென்றென்றே கதறுகில்லேலே; வாயே வாழ்த்து கண்டாய்; வாழ்த்தவாயு நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியுந் தந்ததலைவனை; பொற்புடைய பேசக்கடவோம் பேயர்பேசுவன பேசுதுமோ பிழையற்றேமே." என்று கூறியவாற்றானும், "வாக்கின் மன்னவர், நாவுக்கரசர், தாண்டகவேந்தர்" எனும் அவர்களுடைய திருநாமங்களானும் நன்கு அறியலாம். மற்றும், பெருமானைப்பற்றிப் புகழ்ந்து பேசாதவர்கள் பிணியின் வயத்தராய்ப், பிறப்புஇறப்பு எனுந்தொழிலுக்கு ஆளாகி மீளாநிலை யடைகின்றார்கள்." என்று உரைக்கின்றார்கள். அப்பாடல் வருமாறு:—

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
  தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
  உண்பதன்முன் மலர்பறித் திட்டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
  அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
  பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே.

எவ்வாற்றானும், இறைவனைப் பற்றிப் புகழ்ந்து பேசுதல் அத்தியாவசியமானதேயாம். இதனாலேயே பெரியார் பலர் எம்பெருமானிடத்து, "ஐயனே! எளியோம் எப்பிறவி தாங்கினும், உன் இணையார் திருவடிகளை மறவாமனமுடையராய், உன்னைப் புகழ்ந்துபாடும்பேற்றை எங்களுக்கு அளித்தருளுதல் வேண்டும்." என்று வேண்டுகின்றார்கள். நமது ஞானப் பனுவல்களை நவின்றருளிய சிவஞானப் பெருஞ்செல்வர்கள் எல்லோரும், பாடும் பணியை வலியுறுத்திக் கொண்டே செல்கின்றார்கள். "குற்றாலத்தானையே கூறு." என்றே பட்டினத்தடிகளும் பகர்கின்றார்கள். நமது

மாணிக்கவாசகப் பெருமானாரும், "பெருமானைப் புகழ்ந்துபேசும் பேச்சுப் பிறவிப்பிணியை நீக்குந்தகையது." என்பதனை விளக்கி இரண்டு செய்யுட்கள் கூறுகின்றார்கள். அவை வருமாறு:—

காணுங் காரணங்க ளெல்லாம் பேரின்பமெனப்
பேணு மடியார் பிறப்பகலக்—காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையி லென்றும்
பிரியானை வாயாரப் பேசு.

பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையே யென்று பிறப்பறுத்தே னல்ல
மருந்தினடி யென்மனத்தே வைத்து.

"பேசுவார்க்குப் பிறப்பில்லை." யென்றால், "பேசாதவர்க்குப் பிறப்புண்டு." என்பது தானே கொள்ளக்கிடக்கின்றது. இனிப் பேசுவார்பால், "நல்வினை, தீவினை யெனும் இருவினைகளும் நண்ணா." என்பதுபற்றி, "இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு." என்று நமது நாயனாரவர்கள் நவில்கின்றார்கள். புரிதல்— "எப்பொழுதுஞ் சொல்லுதல்." என்பது பரிமேலழகருரை. மேற்கூறிப் போந்தவைகளால், "பிறவிப்பிணியையும் இருவினையையும் நீக்கவல்லபெருமருந்து, பெருமானைப் புகழ்ந்து பேசும் பேச்சே." யென்பது தெளிவாகத் தெரிகின்றது. இதனாலேயே, "வெப்பொடு விரவியோர் வினைவரினும், அப்பாவுன் னடியலா லரற்றா தென்னா; பேரிடர் பெருகியோர் பிணிவரினும், சீருடைக்கழலலாற் சிந்தைசெய்யேன்; தும்மலோ டருந்துயர் தோன்றிடினும், அம்மலரடியலா லரற்றாதென்னா; வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும், எந்தா யுன்னடியலாலேத்தா தென்னா; உண்ணினும் பசிப்பினு முறங்கினுநின், ஒண்மலரடியலா லுரையாதென்னா." என்று நமது ஞானசம்பந்தப் பெருமானாரும் நவின்றருளினார்கள்.

இறைவனைப் பற்றி எவ்வாறு பேசுதல் வேண்டும்? நமக்குக் கஷ்டநஷ்டங்கள் வந்த காலத்தில், "விணாய்ப்போன—பாழாய்ப்

போன தெய்வம் நம்மை இப்படி ஆட்டுவிக்கின்றதே" என்று புலம்புதலோ? "கண்ணிலாக்கடவுள்" என்றுகழறுதலோ? அன்று. அன்று. பின்னர் எவ்வாறு பேசுதல் வேண்டும்? அவர் நமக்குச் செயும் நன்றிகளைப் புகழ்ந்து பேசுதல் வேண்டும். அதற்கு, அப்புனிதன் புகழ்மலர்மாலைகளாக விளங்கும் தேவார திருவாசகா திகளைஉள்ளம் உருக ஓதலாம். அத்தேவன் திருநாமங்களை உச்சரிக்கலாம். அப்பூரணன் புராணங்களைப் படிக்கலாம். அவ்வண்ணல் உண்மை விளக்கங்கூறும் நூல்களைக் கற்றுணரலாம். உலப்பிலா ஆனந்தம் பெற்றுய்யலாம்.

உதவிப்பத்திராதிபர்.

சொற்காத்தல்.

திருப்பாதிரிப்புலியூர்

(பண்டிதை அசலாம்பிகை அம்மாள் அவர்கள் எழுதியது.)

சொற்காத்த லென்னு மிவ்வரிய குணமானது ஒவ்வொருவரையும் தற்காக்குந் தன்மையுடையதாம். குலமகளுக்குக் கற்பு எவ்வாறு சிறந்ததோ, அவ்வாறே குலமகனுக்கும் எவ்வாற்றானும் சொற்காக்கும் குணமே சிறந்ததாகும். ஞானம், வாய்மை, ஒழுக்கம், தவம், புகழ், இவை கற்பிலா மகளிரிடத்துச் சிறவாதவாறே, சொற்காக்கும் மனநிலை யில்லாரிடத்தும் அவை சிறவாதென் றுணரல்வேண்டும். என்னை? கற்பிலா மனைவியும், கற்புடையவளாகத் தன் கள்ளமறியாது நம்பியிருக்கும் கணவனை நம்பிக்கைத் துரோகம் செய்தவளாகின்றனள். தன்னை எதிர்பார்ப்போர்கட்குச் செய்வதாகவோ, செய்விப்பதாகவோ, வாக்காற்கூறிப் பின்னர் எக்காரணம்பற்றியாயினும், சொற்சோர்வுபட்டுத் தமது சொல்லைக் காவாதொழிவோரும், நம்பிக்கைத் துரோகம் செய்தவராவர். இதனை

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல் லிழுக்குப்பட்டு."

என்ற திருக்குறளே விளக்குவதாகும். இவ்வகைக்கேட்டிற்குள்ளாவோர்களில் பலர் "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின், எண்

றுவமென்பதிழுக்கு" என்ற அருமொழியையறியாதாராய். அதாவது முன்பின் நிரயோசியாமலும், சொல்லிச் சோர்வுபட நேருவதால் விளையும் தீங்கின்னதென அறியாமலும், புகழ்ச்சி விருப்பினுல் தன்னுல் முடிக்கவியலாக் கருமங்களிலும், முடிக்கவியலினும், அவ்வாறு முடிக்கும் ஊக்கமும், சிரத்தையும் மனதிலில்லாவிலமையிலும் அவசரபுத்தியால் வாக்களிப்பர். சிலர் தன் சுயநலங்கருதிப் பிறர்க்கொரு உதவி செய்ய முந்துவர். சிலர் கூறுங்கால் அச்சுயநலங் காரணமாகவிருந்து, பின்னர் அக்காரணம் தவிருமேல் தமது சொற்காத்தலினும் நழுவத்துணிவர். சிலர் தன்னின் மிக்கார்பாலின் சொற்காக்கும் தன்மையை மேற்கொண்டொழுகித் தன்னினு மெளியார்பால் சொற்சோர் வுறுவதில் சோர்வுபடா தொழுகுகின்றனர்.

சொற்காக்கும் குணமே நம்மையாளும் அரசர்க்கரசர் முதல் அடிமைக்கடிமைகள் இறுதியாக ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் தரத்திற்குத்தக்க தன்மதிப்பைக் காத்து மேன்மைப்படுத்துவதாகும். அரும்பொருள் விளக்க நூலாரும் "சொல்" என்னும் பதத்திற்குப், "புகழ்" என மறுபொருள் (அதுவே புகழை விளைவிக்கும் ஆற்றலுடையதென்பது விளங்கக்) கூறினர் போலும். ஆரியர்க்குப் பண்டைக்காலத்தில் சொற்காத்தல் எனும் உயர்குணமன்றோ மதிப்பில்லாப் பெருஞ்செல்வமாய் விளங்கியது. அரிச்சந்திரன் எனும் ஸத்ய தேவதைக்கொப்பான அரசன் சொற்காத்தலினுலன்றோ இன்றும் என்றும் அழியாத புகழுடம்பெய்தினன். இராமன் தந்தையாகிய தசரத சக்கிரவர்த்தி தன் சொற்காத்தலின்கண், எத்தகைய உறுதியுடையவராய்ச் சிறப்புற்றனர். மஹாபாரதத்தில் பாண்டவரின் அம்மானுகிய சல்லியன் தன்மாட்டன்புடைய மருமக்களுக்கு விரோதிகளாகப் போர்புரிய முன்வந்த துரியோதன மன்னனுக்குப் படைத்துணைவனுக அமர்ந்து தேர்ப்பாகன் மகனுய்க் கருதப்பட்டுவந்த கர்னராஜனுக்குத் தேர்விட இணங்கியதும் இச் சொற்காத்தலின்கண் வைத்த மாற்றவொண்ணு மதிப்பினுலன்றோ? தமது சத்துருவாகிய துரியோதனனுக்குத் தம்மை வெல்லத்தக்க கிரகவலிமைபொருந்தும் முகூர்த்த

நாளை அப்பாண்டவரிற் பின்பிறந்த ஸகாதேவனே மனமிசைந்து குறிப்பிட்டுக்கொடுத்ததும் அச் சகாதேவன் எதிரியென்று தெரிந்திருந்தும், அவனையே கொல்ல அவனை நாள் வைத்துக் கொடுக்க இத்துரியோதனன் வேண்டியதும் அவன் சொற்படியே நம்பி அம்முகூர்த்தத்தில் போர்முனை குறித்ததும் இச் சொற்காக்கும் உயர் குணத்தின் கண்ணுள்ள திடபுத்தியினாலன்றோ? இதனினும் அரிய உதாரணமும்வேண்டற்பாலதோ? அத்தகையசொற்காக்குங்குணத்தினைத் தற்காலத்தில் நன்னிலையிலுள்ள பலருங்கூடக் கைவிடுகின்றனர் என்றே கூறலாம். இதற்குப் பிரபல பிரமாணங்கள் வேண்டியதில்லை. தற்காலத்தில் நம் நாட்டில் ஏற்படும் பல நற்சாதனங்களும் நன்முயற்சிகளும் தோன்றி விரைவில்இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோவதே சான்றாகும். வாக்கினால் ஒவ்வொருவரும் சபைகளிற்புகழ்படப்பேசிக் கையாளும் ஸங்கா கையொப்பமிட்டு இரண்டையுமே மறப்பது மிகச் சாதாரணமன்றோ! எவரும் இக்குணத்தைத் தகுதியுடையார்மாட்டே மிகுதியும் எதிர்பார்த்திருப்பர். எளியோரால் பிறர்க்கு நேரக்கூடிய நன்மை பெரிதும் இராதாதலின் அவ்வெளியோர்பாலிக்குணத்தை நாடிநிற்பதுமிலதே. தகுதியுடையோர்தன்னலத்தையோ தன்மதிப்பையோ கருதித்தன்னிற் றக்கார்பால் மட்டும் சொற்சோர்வுபடாது எச்சரிக்கையாயொழுகுவதுபோலத்தன்னினெளியோராய்த் தம்மைநாடினோர்பாலும்சொற்சோர்வின்றி யொழுகுவரேயாயின்அவரினும் சிறந்தோர் எவர்? இத்தகையார் புறத்தே புகழ்பெறினும் எளியோரின் அகத்தேயாவதுஇகழப்பெறுவர். தன்னெஞ்சமும்தன்னை எண்ணிப்பார்க்குங்கால் இகழாதொழியுமோ?

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்ற நல்லோர் மொழிபொய்க்குமோ? கம்பராமாயணம் தாடகை வதைப்படலத்தில் "சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம்" என்று இராமபாணத்தைச் சொல்லிற்கு உவமித்தனர் கவிச்சக்கிரவர்த்தி. என்னே! சொல்லிய சொல் குறிபிழையாதவாறுபோல அக்கணையும் இலட்சியம் தவறாமல் தாடகையின் நெஞ்சில் ஊடுருவிச்

சென்றதென்றார். அ் "சொல்" என்னும் மொழி தவத்தோரால் சொல்லப்படும் சொல் எனவும், ஈண்டு போர்முனையில் பாணத்தைப் பிரயோகிக்க ஆவ் விராமனது "சொல்" எனவும் இரு பொருள் தரும். இதில் முந்தியதினும் பிந்திய பொருளே சிறப்புடையதாகும். இராமன் இளங்குமாஞப் உலக அநுபவமெய்தப் பெறாதவனு யிருந்தும் இயற்கையாய உத்தம குணத்தினுல் சொல்லிற்றவறான். அவன் வாக்குப் பிழைபாததென்ப தெந்தனை யுறுதியோ அத்தனை அவன் கரத்திற்பற்றித் தொடுக்கும் சரமும் பிழைபாதென்று பொருள் தருதலினென்க. இவைகளிஞற் சொல்லிற் சோர்வுபடாத குணமே எக்காலத்திலும் மாந்தரினுயர்ச்சியைக் காட்டுவதா மென்பதை எளிதினுணரலாம். நாம் நமது இளமை தொட்டே ஒன்றைச் செய்வோமென்று எண்ணுவதற்கு முன்னதாகவே, அச்செயல் தன்னுல் செய்யத்தகுவதா, செய்ய இயல்வதா, வென்பவைகளை நன்காராய்ந்து பின்னரே வெளியிடுவதென்கிற உறுதியை ஒவ்வொரு விஷயங்களிஞம் சிந்திக்கப் பழகிவரல் வேண்டும். இவ்வாறு சிந்தித்துச்செய்யுமூற் கூறுவதினும் சொல்லிற் கூறாத செய்கையினுலேயே தமது கருத்தை வெளிப்படுத்துவோர் பின்னும் பன்மடங்கு அறிவின் திட்பமுடையோராவர். ஆராயுங்கால் இவ்விதச்சொற்காத்தல் பெரும்பாலும் பொருள் என்னும் அளவு கருவியினுல் சோதிக்க நேருங்கால் நிறை குன்றுவதுதான் மிகுதி. மனத்தை இப்பொருள் விஷயத்தில் வரம்பில் நிறுத்தமாட்டாதவர்க்கு ஒருபோதும் சொற்காத்தல் முடியாததே. இது மூவாசைகளிலும் ஒக்கும். நளமகாராஜன் தன்னையே விரும்பிநிற்கும் தமயந்தியெனும் தேவமாதரும் வியக்கும் பொற்புடைய இராஜகன்னிகையின் சுயம்வரத்திற்காகப் போந்து, அங்கு சந்தித்த இந்திரனுதி திக்குப்பாலகரின் கோருதலை மறுக்கமாட்டாமல் அக் கன்னிகைபால் அவர்கட்காகத் தூது சென்று, அத்தேவருள் ஒருவரை மணக்கும்படி பலவாறு வற்புறுத்தியும் தன்மனத்திலவள்பால் குடிகொண்டிருந்த கரையிலா விருப்பத்தைத் தனது சொற்காக்கும் உறுதியால் எழவொட்டாமல் அடக்கியொழுகிய தன்மையே பெருஞ்சுட்டன்றோ? இஃது தற்காலத்திய வாலிபரால் சாதிக்கலாமென எண்ணவும் கூடியதோ?

புகழ்க்குரியோராய முன்னோரெவரும் வாழ்க்கைநலம், பொருளீட்டல், வெற்றிவிரும்பல்யாவும் சொற்காத்தலின் பின்னேதுணிந்து கொண்டனரன்றி வேறில்லை. கன்னன் அர்ச்சுனன்மீது ஒருமுறை குறிபிழைக்கின் மறுமுறை தொடுப்பதில்லை யெனத் தாயாகிய குந்திதேவிக்கு வாக்களித்தமையாலன்றோ தன்னுயிர்க்கிறுதி வருமெனவுணர்ந்தும், அப்பேரப்பெருஞ்சிற்றத்தினும்மீட்டுத்தொடுக்க மறுத்தனன். இதனை மகாபாரதத்தில்

பிறகு புரிந்தெழில் * * *
"சீரியவும் வந்தெனை யேவுகென் றலறவும்
உறவொடு குந்திவழா வரம்பெறு தலினுரைவழுவும்
பெரிதா குலம் புரியினும்
மறுகணை யொன்று தொடேன் முனிந்தினியென
வரிகழலங்கர் குலாதிபன் புகலவே"

என்று கூறிய செய்யுளால் நன்கறியலாம். என்னே! உயிரையும் பெரிதா யெண்ணிலர் உயர்குலமுடையோர். ஆதலின் நறுமண முள்ள பற்பொடிகளினால் நாவைத் தூய்மையாக்குவதுதான் வாக்கின் நலமெனக்கருதாது சொற்காத்தலென்னும் சுகந்த ஔஷதியை மறந்திடாது விலக்கிலடக்கி இம்மையிற் புகழும் மறுமையிலின்பமும் பெற ஒவ்வொருவரும் முந்துதல் கடமையாம். தொடங்குங்கால் சொற்காத்தலென்பது கற்பைக்காத்தலுக்கிணை யெனக்கூறியதும், "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்னும் ஔவையாரின் அருமொழி கொண்டேயாம். இதனால் சொற்காத்தலென்னும் காரணம்பற்றியே கற்பெனும் காரியம் நிகழ்வதெனவும் நன்குணரலாம். சொற்காப்பவரே எல்லாவகையினும் தற்காப்பவராவாரெனல் என்ஞான்றும் சோர்வுபடுவதன்றாம்.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும் செங்கோடன் மயூரமுமே.

—அருணகிரிநாதர்.

ஹிந்து மதத்தின் பெருமை.

ஸ்ரீகாசியில் ககூ௦சா-ஞு ஜனவரி-மீ ௩-உ கூடிய பாரததர்ம மகா மண்டலத்தில் ஸ்ரீ லோகமான்ய பாலகங்காதர திலகர் பெருமான் செய்த உபந்யாசத்தின் சாரம்:—

(கச௦-ம் பக்கத்தொடர்ச்சி.)

பூரணமடையாத மதங்கள் நிலைத்திருக்க முடியுமா? பூரணமான உண்மையின்மேற் கட்டப்பட்ட மதம் ஹிந்துமதம் ஒன்றுதான். ஸநாதனமான உண்மைக்கு எப்போதும் வெற்றிதான். அது ஒருபோதும் அழியாது. பலகோடிப் பெயர்களால் அநுஷ்டிக்கப்பட்டுவரும் நமது மதம் அழியவேயழியாது; அப்படியழிவதாயின், அம்மதத்தை யனுஷ்டிக்கப் பட்டவர்களெல்லாருமே ஒரே காலத்தில் திடீரென்று அழிக்கப் படவேண்டும். இது முக்காலத்திலும் முடியாத காரியம். ஆனால் தற்போது இந்துமதம் கலங்கி நிற்கின்றது. நாம் உட்பிரிவுகளை நீக்கி யொன்றுகூடி ஒரு பெரிதான ஸநாதன மதத்துக்குத் தூண்களாக இருந்து உழைப்போமானால், நமதுமதத்தில் இடையேவந்து புகுதப்பெற்ற சில அவாந்தர ஆசாரங்களை நீக்கிவிட்டு முயல்வோமானால், மூர்த்திகளை யனுசரித்த பேத அபிப்பிராயங்களை விட்டொழித்து, அழியாத ஆத்ம தத்துவத்தையுணர்வோமானால், வெற்றி விரைவில் கிடைத்துவிடுமென்று சொல்லவும் வேண்டுமோ? இதனைத்தான் நம் பாரத தர்ம மஹாமண்டலம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நாம் வெவ்வேறு பாஷைபேசி, வெவ்வேறு உடைகள் தரித்து, வெவ்வேறு கடவுளர்களைப் பூஜித்துவருகின்றோமே! நாம் தற்போது வெளித்தோற்றத்தில் உறவாடாமல் இருக்கின்றோமா? இருக்கத்தான் முடியுமா? அப்படியேதான் ஆன்மவிஷயத்திலும் உழைக்க வேண்டுமென்று மன்றாடுகின்றேன். நமக்கெல்லாம் பொதுவான ஞானத்தைக் கீதை தருகின்றது. இந்த உயர்ந்த ஞானத்தை யழித்துவிட எந்த விதமான சாஸ்திரங்களாலும் முடியாது. அவை மேற்குத் தத்வசாஸ்திரங்களானாலும் சரி; கிழக்குத்தத்வ சாஸ்திரங்களானாலும் சரி. ஒருபோதும் பகவத் கீதை சொல்லிவரும் உண்மையான ஞானத்தை-உண்மையானகொள்கைகளையெதிர்த்துநிற்கமுடியாது.

கையில் உலகதத்வங்களும் ஆன்மதத்வங்களுமே அநுபவஞானத்துடன் பெய்யப்பட்டிருக்கின்றன. இதனை மறுப்பவர் உலக தத்வமும் ஆத்மதத்வமும் அநுபவஞானமும் இல்லாதவரேயாவர். இவர்கள் வாதம் நிலைத்து நிக்கமாட்டா. இந்த வாதங்கள் அற்ப ஞானத்தின்மேற் கட்டப்பட்டவையே யாகும். எல்லாமதங்களும் விருத்தியாகி வரும்போது இந்தப் பகவத்கீதையைத்தான் சாஸ்திரப் பிரமாணமாகக் கொள்ளப்போகின்றன. கீதா சாஸ்திரம் இப்போது உலகமெங்கும் பரவி வருகின்றது. இதனை யறிந்தபின்னர் நாஸ்திகரும் ஆஸ்திகர்களாகி வந்துகொண்டிருக்கின்றார்கள். அப்போது யாவரும் இந்துமதமே உயர்வென்பர்.

இனி, நமது மதத்துக்கு எதிரியாக நின்று விரோதிக்கின்ற சில சக்திகளைக் குறித்துச் சில பேசப்போகின்றேன். முக்யமாக இரண்டு சக்திகளே நமக்கு விரோதபாவத்தில் நிற்கின்றன. ஒன்று விஞ்ஞான சாஸ்திரவாதம்; மற்றொன்று கிறிஸ்துமதம். நமது மதமானது எந்தவழியிலிருந்தேனும் தாக்கப்படுமானால், அந்த வழி இந்த இரண்டுசக்திகளில் ஒன்றின்மூலமாகத் தோன்றினதாகவே இருத்தல் வேண்டும். முதல் சக்தியாகிய விஞ்ஞான சாஸ்திர வாதத்தைப்பற்றிச் சிறிது வாதிப்போம். தற்போது அந்த (மேற்கத்திய) விஞ்ஞான சாஸ்திரத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றது. மேற்கேயுள்ள விஞ்ஞான சாஸ்திரிகள் தற்போது கண்டுபிடித்துக் கொண்டிருக்கும் உண்மைகளையெல்லாம், "நமது வேதகாலத்து ரிஷிகள் அறிந்து வெளியிட்டவைகள்தாம்" என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்; அதாவது தற்கால விஞ்ஞானசாஸ்திர தத்வங்களெல்லாம் மெல்ல மெல்ல நமது பூர்விக ரிஷிகளது ஞானத்தையே சமீபித்துக் கொண்டிருக்கின்றன என்பது வெளிப்படை. விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தார் தமது பரந்த ஆராய்ச்சியின் பலனாக ஒருநல்ல முடிவுக்கு வந்திருக்கின்றார்கள். இந்து மதத்தின் முக்கியமான-ஆணிவேரான கொள்கைகளெல்லாம், அழிக்கக்கூடாத-நிரூபிக்கக்கூடிய உண்மையின் மேல் கட்டப்பட்டிருக்கின்றன வென்பதை யறிந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக:—சைதன்யம்எங்கும் எல்லா வஸ்துவிலும்

பரவியிருக்கின்றது. இது தனிமையான இந்துமதக் கொள்கை. வித்வான் போஸ் என்பவர், "வேதாந்தக் கொள்கைகளெல்லாம் தற்கால விஞ்ஞான சாஸ்திர தத்வங்கட்கு ஒத்திருக்கின்றன" என்று சமீபத்தில் நிரூபித்துக்காட்டியிருக்கிறார். தேஹத்துக்கு விலக்ஷணமாக (ஸம்பந்தப்படாததாக) ஆத்மா அழிக்கப்படாததாய் விளங்கி நிற்கின்றது. இதுவும் இந்துமதம் தனிமையாகக் கண்ட உண்மையே. இதுவும் தற்போது நிரூபிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

பூர்வகர்மங்கள் உண்டென்னும் கொள்கையும் மறுபிறவியுண்டென்னும் கொள்கையும் மற்றும் உதாரணங்களாக எடுத்துக் கொள்ளப்படலாம். இவை இந்துமதக்கொள்கைகளேயாம். விஞ்ஞான சாஸ்திரவித்வான் ஹெர்பட்ஸ் பென்ஸர் என்பவர் இக்கொள்கைகளை நம்பமாட்டோமென்று மறுத்துத் தள்ளிவிட்டார். ஆனால் சமீபத்தில் நமக்கு நல்லஆதாரம் கிடைத்திருக்கின்றது. வித்வான்களான ஸர் ஆலிவர் லாட்ஜும் மேயரும் மற்ற வித்வான்களும் "தேகத்துடன் ஆத்மாவானது அழிந்து போகாது" என்ற நிச்சயத்திற்கு வந்திருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார்கள். தற்கால விஞ்ஞான சாஸ்திரங்கள் புனர்ஜன்மத்தை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், கர்மங்கள் என்னும்கொள்கையைஒப்புக்கொள்ளுகின்றன. ஆனால் இதனை கிறிஸ்துமதம் நம்பவில்லை. ஒவ்வொரு சமயத்திலும் புதிது புதிதான ஆத்மாக்களைக் கடவுள் படைத்துக்கொண்டிருக்கிறார்" என்று கிறிஸ்துமதம் சொல்கிறது. இதனைப்பற்றி வாதிக்க இது சமயமில்லை. இந்தக் கொள்கை சாஸ்திர வாதத்தாலும் அநுபவ ஞானத்தாலும் அடிபட்டுவிடும். இவற்றால் மேற்கு நாட்டில் விஞ்ஞான சாஸ்திரமும் ஆத்ம சாஸ்திரமும் இப்போது மாறுதலடைந்து வருகின்றனவென்பது வெளியாகின்றதல்லவா? தற்கால விஞ்ஞான சாஸ்திர உண்மைகளால், நம்மோடு எதிர்த்து நிற்க முடியாமல், நமது விரோதிகள் மறைந்துகொண்டு வருகிறார்கள். ஆகையினால் இதுதான் சமயம். எழுந்து நின்று ஊக்கங்கொண்டு உழைத்து வாருங்கள். வெற்றி கிடைக்கும் வரை விடாதீர்கள். ஒற்றுமையுடன் நின்று சிறிது முயற்சியேனும்

செய்தீர்களாயின், ஒப்பற்ற வெற்றி உங்களெதிரே நிற்கக் காண்பீர்கள். இப்போது அமெரிக்கர்கள் நமது வேதாந்த மதத்தைப் படித்து வருவதோடு மாத்திரம் நில்லாமல், அதனைச் சிந்தனை செய்து கொண்டும் வருகின்றார்கள். "இருதயத்தின் துடிப்பு நிலைபெற்று நின்றுவிடும்" என்று ஒரு ஐரோப்பிய வைத்யனாவது ஒத்துக்கொள்வதில்லை. ஆனால், அவர்கள் கொள்கைக்கு மாறாக நிதர்சனம் செய்யப்பட்டிருக்கின்றது. வேதாந்த சாஸ்திரமும் யோக சாஸ்திரமும் தற்கால விஞ்ஞான சாஸ்திர தத்வங்களினால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றன. இதுவே ஆத்ம தத்வ வுணர்ச்சியின் ஒற்றுமையைக் காட்டக்கூடிய அறிகுறியென்று வைத்துக்கொள்ள வேண்டும். இதுவே நமது வெற்றிக்கு ஸாதனம். ஆகையினால், உண்மையைப் பின்பற்றி நின்று, நமது சாஸ்திரங்களையெல்லாம் இன்னும் ஒருமுறை விளக்கமாகப் பதிப்பித்து அவற்றைத் தற்கால விஞ்ஞான சாஸ்திரப் பிரமாணங்களால் நிரூபித்து, உலகத்துக்கு முன் கொண்டு வந்து நிறுத்தல் வேண்டும். அப்போது நமது சாஸ்திரங்கள் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப் பட வேண்டியதவசியமாகும். அவற்றை மறுப்பவன் பைத்தியக்காரனென்றும் அறிவில்லாதவன் என்றும் அழைக்கப்படுவான்.

ஆனால், மறுபடியும் நான் வற்புறுத்திச் சொல்கிறேன். "ஒற்றுமையென்பது மிகவும் அவசியமானது; அப்போதுதான் அந்த வேலை தவறுபடாது நடந்தேறி வரும்." நீங்கள் உட்பிரிவுகளில் வைத்திருக்கும் த்வேஷ பாவங்களை விலக்கி, ஒற்றுமையுடன் நின்று உழைக்காமற் போனால், நீங்கள் உங்கள் கடமைகளைச் செய்யத் தவறினவர்களாகவும், உங்கள் பூர்விகர்கள் கொள்கைகளை மறுத்தவர்களாகவும் ஆவீர்கள். நாம் வெகு காலங்களாகச் சோம்பியிருக்கிறோம். இந்தச் சோம்பலினால் முட்டாள்களாகவும் ஆக்கப்பட்டிருக்கிறோம். "நமது பூர்வதனமானது பொற்குவியலேதான்; இருப்பு மேடல்ல." என்று அந்நியர்களால் சொல்லப்பட வேண்டிய காலம் வந்திருக்கின்றது. இப்போதும் தூங்கிக் கொண்டிருக்கலாமா? தற்கால விஞ்ஞான சாஸ்திரத்தைத் துணைப் பற்றி நின்று நமது சாஸ்திரங்களைக் கொண்டு வெளியேறினோமானால், அது உங்கட்கு நல்ல வெற்றியைத் தரும். அப்போது

கிறிஸ்தவர்கள் இங்கே வந்து நம்மவர்க்குக் கிறிஸ்து மதத்தைப் போதித்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, நாம் உலகமெங்கும் சென்று நமது ஸநாதன தர்மத்தைப் போதிக்கவேண்டி வரப் போகிறது. ஆகையினால் சிறிது நேரமும் வீணாக்காதீர்கள். உங்கள் மனோசக்திகளையெல்லாம் ஒருவழிப்படுத்துங்கள். தற்கால விஞ்ஞான சாஸ்திர முறையுடன் நமது மதாசாரவுண்மைகளைப் போதிக்கக்கூடியதொரு "இந்து சர்வகலாசாலை ஸ்தாபனம்" என்னும் ஒரு பெருநன்முயற்சியாரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இதுவும் ஒரு நல்லகாலத்தறிகுறிதான். இதனையெல்லாரும் ஆதரிக்க வேண்டும். தனிகர் என்றும் தரித்திரர் என்றும் வித்யசம் பாராட்டாமல் எல்லாரும் இயன்றவரை யுதவுங்கள். முடிவாக "உங்கள் உட்பிரிவுகளை நீக்கியொற்றுமையுடன் நின்று உழைத்து, உலகத்துப் பெரிய தேசங்களுள் உண்மையான ஒப்பற்ற பாத்திய முடைய தேசத்தினராக நில்லுங்கள்" என்று பின்னுமொரு முறை வற்புறுத்தி விட்டு எனது உபந்யாஸத்தை நிறுத்திக் கொள்கிறேன்.

மோ. வே. கோவிந்தராஜ ஐயங்கார்.

கௌரி.

(வாகீசபக்தன் எழுதியது.)

நமது மங்கலப் பாண்டி வளநாட்டின்கண்ணே, மதுரைமாநகரத்தில் விக்கிரமபாண்டியன் செங்கோல் செலுத்திக்கொண்டிருந்த காலத்தில், அப் பழம்பதியில் "விரூபாக்ஷன்" என்று ஒரு வேதியர் இருந்தார். அவருடைய மனைவியார் பெயர் சுபவிரதை. அவ்வம்மையார், கற்பில் அருந்ததியனையவர். அவர்கள் இருவரும் மகப்பேறு இன்றி நெடுநாள் அருந்தவங்கிடந்து, பெருந் தருமங்கள் புரிந்து, சப்த கன்னிகைகளை வணங்கி, அரியதோர் பெண்மகவைப் பெற்றெடுத்தார்கள். அதற்கு, அம்பிகையின் திருநாமமாகிய, "கௌரி" எனும் பெயரை இட்டார்கள். அக்

கௌரி யெனும் பெண்மணி தனது ஐந்தாவது ஆண்டிலேயே, பிறவிப் பிணியை நீக்கவல்ல மெய்ப்பொருளைத் தேருஞ் சிந்தையாளாய்த், தன் தந்தையாரைப் பணிந்து, "அப்பா! இப்பிறவிப் பிணியை நீக்கவல்ல தெய்வத்தன்மை பொருந்திய மந்திரம் யாது?" என்று கேட்டனள். அப்பொழுது அவ்வந்தணாளர், "சிறு பெண்ணிற்கு இத்தகைய உண்மை ஞானம் உதயமாகி இருக்கின்றதே!!" என்று ஒரு பக்கம் அதிசயமும், ஒருபக்கம், "இத்தகைய அறிவுடைய பெண்மகவு நமக்குக் கிடைத்திருக்கின்றதே!" என்று அளவிலா ஆனந்தமுங் கொண்டு, அவளுக்கு உமாதேவியாருடைய திருமந்திரத்தை உபதேசித்தார். அவளும் மிகுந்த சிரத்தையுடன் அதனை நாத்தழும்புறப் பயின்று கொண்டிருந்தாள்.

இஃது இவ்வாறாக அவ்வேதியர், "தமது சைவசமயத்திற்கும், தமது தவக்கொழுந்தாகிய பெண்மகவிற்கும் இசைந்த மணாளன் "பிரமசரிய நிலையில் வழுவாதவனாக, வேதாகமங்களில் வல்லுநனாக, நற்குணமுடையவனாக எப்பொழுது வருவான்." என்று சிந்தனை செய்துகொண்டிருந்தார். கௌரியும் கடிமணப் பருவக் கன்னிகையாயினள். இவ்வாறு இருக்கும்பொழுது ஒரு நாள், அவ்வேதியர் வீட்டிற்கு அயல் கிராமத்திலே வசித்துக் கொண்டிருந்த வைணவப் பிரமசாரி ஒருவன் பிக்ஷைக்கு வந்தான். அப்பொழுது பிக்ஷை வாங்குதற்காக வாயிலில் வந்து நின்ற அப்பிரமசாரிக்குத் தனது பெண்மகவை, அவ்வேதியர் தன் மனைவியையும் சுற்றத்தாரையும் கேட்காது, அவனுடைய குலம், கோத்திரம், வாழ்க்கை, வீடுவாசல், நிலம், பலம், கல்வி, அறிவு, ஒழுக்கம், சமயம் முதலியவைகளையும் ஆராயாது, அப்பிரமசாரியின் நல்வினைப் பகுதியும், அக் கன்னியின் விதியும் ஒருசேர வருதலால், அவன் கையில் தாரைவார்த்துக்கொடுத்துவிட்டார். இதனையறிந்த அவரது மனைவியாரும் சுற்றத்தாரும் மனந்தளர்ந்தார்கள். பிறகு அவர் முன்னமேயே தாரைவார்த்துக் கொடுத்து விட்டாராதலால், மறுக்க முடியாதவர்களாகிக், கௌரியை அழகிய ஆடை ஆபாரணங்களால் அலங்கரித்து, அப்பிரமசாரிக்கு அக்கினி சாக்ஷியாகக் கல்யாணம் செய்து, சீர்முறைகள் பல கொடுத்து, அவர்கள்

இருவரையும் அப்பிரமசாரியினுடைய கிராமத்திற்கு அனுப்பினார்கள். வீடுகடோறும் பிக்ஷைவாங்கிக்கொண்டு திரிந்த அப்பிரமசாரியும், தரித்திரனுக்கு நேரே போகும்வழியில் பொன்முடிப்பு அகப்பட்டவாறு, திருமகள் போல்வாளாகிய அப்பெண்மணியை மணஞ்செய்துகொண்டு, தனது இல்லத்திற் புகுந்தான். புகுந்ததும், அவனுடைய தந்தையாரும் தாயாரும் அவன் மணந்து வந்த, ''ஈசனுக்கே மனம்வைத்த நேசவல்லி''யாகிய கௌரியின் சிவ வேடப்பொலிவழகையும், சிவசிந்தனையையுங்கண்டு பொறாதவர்களாகி, அவளை வெறுத்து, வேறாக ஒதுக்கிவைத்து நிந்தனை செய்துகொண்டிருந்தார்கள். பின்னர் ஒருநாள் அவளைத் தனியே வைத்துவிட்டு, வீட்டைப் பூட்டிக்கொண்டு, அவர்கள் எல்லோரும் தங்களுடைய சுற்றத்தார் வீட்டில் வேற்றூரில் நடைபெற்ற கல்யாணத்திற்குச் சென்றுவிட்டார்கள். அப்பொழுது கௌரி, “வெகுநாட்களாகச் சிவனடியார்களையும், அவர்களுடைய சிவ வேடங்களையும் கண்ணாரக் காணாததால், இன்று என் கண்கள் மாசுபடுகின்றனவே.'' யென்று கவலைகொண்டு, மற்றும்

சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே
 யிரும்பேவல் செய்து நாளும்
அவனடியார் திறந்தொழுகா வாக்கையே
 மரஞ்செவிகண் ணாதி யைந்தும்
பவனடியா ரிடைச்செலுத்தாப் படிவமே
 பாவைமறை பரவுஞ் சைவ
தவநெறியல் லாநெறியே பவநெறியென்
 றளியளாய்த் தளர்வாள் பின்னும்.

எனைத்துயிர்க்கு முறுதியிக பரமென்ப
 வவைகொடுப்பா னெல்லாந் தானும்
அனைத்துயிர்க்கு முயிராகு மரனென்ப
 வவனறிவார்க் கங்கம் வாக்கு
மனத்துறுமெய்ப் பத்திவழி வருமென்ப
 வப்பத்தி வழிநிற் பார்க்கு
வினைத்துயர்தீர்த் திடவெடுத்த வடிவென்ப
 தவனடியார் வேட மன்றே.

என்று அவள் வருந்திக் கொண்டிருந்தபொழுது, சிவபெருமான் அவளிடத்துக் கருணைகொண்டு ஒருசிவனடியாராக வருகின்றார். அவர், தமதுதலை, கழுத்து, காது, கை, மார்பு முதலிய அங்கங்களில் ருத்திராக்ஷமணிகளை அணிந்திருக்கின்றார். நரை திரை மூப்பு எய்திய விருத்தாப்பியராக விளங்குகின்றார். அவருடைய நெஞ்சு இருமுகின்றது; உடை சிந்திருக்கின்றது; தலை ஆடுகின்றது; உடம்பு வளைந்து அசைகின்றது. அவருடைய தோளிலே மேல் வேஷ்டி விளங்குகின்றது; மார்பிலே முப்புரிநூலும், திருநீறும் பொலிகின்றன. ஒரு கையிலே சிவஞானபோத புத்தகம் வைத்திருக்கின்றார்; மற்றொரு கையிலே மிகப்பழமையான ஓர் ஓட்டைக் குடையும் ஊன்றுகோலும் வைத்திருக்கின்றார். இவ்வாறு அவர் அன்னத்தனியாகப் பசியினால் பலநாள்கள் வருந்தினவர் போல் வாடிவதங்கிய கிழப்பிராமணராய்க் கௌரி இருந்த வீட்டிற்கு வந்தார். கண்டனள் கௌரியும்; எழுந்துநின்றனள்; அன்புருவாயினள்; அவரைத் தவிசில் அமரச்செய்தனள்; தொழுதனள்; துதித்தனள்; "இன்று இங்கே சிவபெருமானைக்காண எளியேன் என்னதவஞ் செய்தேன்." என்றனள். அதற்கு அவர், "பசித்து உன்பால் வந்தேம்." என்றனர். அதற்குக் கௌரி, "என் மாமன்மாமி முதலியோர் வீட்டைப் பூட்டிக்கொண்டுபோய் விட்டார்கள்." என்றனள். அப்பொழுது அவ்விருத்தர் நீ தொடுமுன் அப்பூட்டுக் கழன்றுவிடும். திறந்து வேகமாகச் சமையல் செய்வாயாக." என்றனர். அவ்வாறே அவளும் சமையல் செய்து முடித்தனள். பிறகு அவரைத் திருவமுது செய்ய அழைத்து, அவருடைய திருவடிகளைச் சுத்த ஜலத்தினாலே விளக்கினள். பிறகு அவரை ஒரு தவிசில் அமரச்செய்து, நறுமலர்களால் அருச்சித்துத், தூபதீப கர்ப்பூர ஹாரத்தி செய்து, நமஸ்கரித்துத் திருவமுது செய்வித்தனள். அவர் சாப்பிடும் பொழுது அவள், இடை இடையே உபசார வார்த்தைகளாகிய அமுதத்தை அவருடைய செவியில் ஊட்டினாள். அவ்வின்னுரைகளையும் அன்னத்தையும் உண்டு, அவ்விருத்த வேதியர், அமுது புசித்தவர்போல் மூப்பு அகன்று, கட்டிளங்குமரன் ஆயினர். அப்பொழுது அவருடைய திருமேனியில் நறுமணச் சந்தனக் கலவையும் பொன்னணிகளும்

பொலிந்து விளங்கின. அக்காளை வடிவத்தைக் கண்டனள் கற்பினுக் கணியாய கௌரி; கையை நெரித்தனள்; திகைத்து வேர்த்துக் கூசி ஒரு புறத்தில் ஒதுங்கி நின்றனள். அப்பொழுது கல்யாணத்திற்காக அயலூருக்குப் போயிருந்த மாமன் மாமி எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வீட்டிற்குட் புகும் பொழுது, பதினாறு வயதின்மேய அக்காட்டிளங்குமரன், பால் மணம் மாறாப் பச்சைப் பிள்ளையாயினன். அப்பிள்ளையினுடைய நெற்றியில் திருநீறு திகழ்ந்தது. அதன் திருவடிகளில் வேதமாகிய சிலம்புகள் ஒலிசெய்து கொண்டிருந்தன. அது, தன்னுடைய பெருவிரலைச் சுவைத்துக் கொண்டு, கண்களில் மைக்கணீர் துளும்ப, வாய்விட்டு அழுதுகொண்டு ஒரு ஆடையில் அருள் வடிவமாய்க் கிடந்தது. கௌரியின் மாமியார், அப்பிள்ளையைக் கண்டதும், அவளைப் பார்த்து, "இப்பிள்ளை ஏது?" என்று கேட்டனள். அதற்குக் கௌரி, "தேவதத்தன் தன்மனையாளொடும் இங்கே வந்து, 'இப்பிள்ளையைச் சிறிது போழ்து பார்த்துக் கொள்.' என்று வைத்துவிட்டுப் போனான்." என்றனள். அதனைக் கேட்ட மாமியார் அளவிலாக் கோபங் கொண்டனள். அவளும், அவளுடைய நாயகனும், "எலும்பை அணிந்து கொண்டு இடுகாட்டில் பொடியாடும் உருத்திரனுக்கு அன்புடையான் மகவுக்கு, அன்புடையாய் ஆதலால் நீயும் எங்களுக்கு ஆகாய்." என்று கௌரியையும் அப்பிள்ளையையும் வீட்டைவிட்டு வெளியே துரத்தினர். பிறகு கௌரி, தாயில்லாத அப்பிள்ளையின் முகத்தை நோக்கித் தெருவில் நின்று தளர்வுற்றாள். தன் மனத்தின் கண்ணே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கூடல் நாயகனைக் குறிப்பிற்கண்டு, உமாதேவியார் திருமந்திரத்தை உச்சரித்தாள். அப்பொழுது, அழுது கொண்டிருந்த பச்சைப்பிள்ளை, ஆகாயத்தில் இடப வாகனத்தில் எழுந்தருளியிருக்கக்கண்டாள். குழந்தை வடிவங்கரந்து, விடையின்மேல் வீற்றிருந்த சிவபெருமானும், உமாதேவியார் திருமந்திரத்தையே சதாகாலமும் உச்சரித்துக் கொண்டிருந்த பார்ப்பன மகளாகிய அக்கௌரியைப் பார்வதியின் வடிவாக்கிப், புலருங்

கண்டு பாவ, இடப வாகனத்தில் ஏற்றிக் கொண்டு, ஆகாயத்தின் மார்க்கமாக எழுந்தருளினர். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். இப்பூவுலகிலுள்ள மக்கள் எல்லோரும் அதிசயித்துக் களிப்புற்றார்கள்.

இச்சரிதம் திருவிளையாடற் புராணத்தில், "விருத்த குமார பாலரான படலம்." எனும் பெயருடன் விளங்குகின்றது. இது மிகப் பழமையானது. இதைப்பற்றி நமது தமிழ் நாட்டில், "பிரைசுக்கு வந்தவன், பெண்ணுக்கு மாப்பிள்ளை யானதுபோல்" என்று ஒரு பழமொழியும் வழங்குகின்றது மற்றும் இதைப் பற்றித் தேவாரத் திருமுறையில், 'பால விருத்தனுமானான் கண்டாய்!; பால விருத்தருமானார்தாமே!' என்று திருநாவுக்கரசு சுவாமிகளும், "விருத்தனுகிப் பாலனுகி" என்று திருஞான சம்பந்தப் பெருமானும் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார்கள். "இச்சரிதத்தில் இலங்கும், "கௌரி" என்னும் நமது நறுந் தமிழ் நாட்டு நங்கையர் திலகத்தின் சிவபக்தியையும், சிவனடியார் பக்தியையும், சைவசமயாபிமானத்தையும் வியந்து, சிவபெருமானே அவள் பொருட்டுக், கிழவராகவும், குமாரராகவும், பாலராகவும் பரிந்துவந்து, அவளை ஆட்கொண்டருளினர்." என்பதை ஆராயுங் காலத்து, ஆண்டவன், தமக்கு அன்பு செய்பவர் ஆடவராயினும் பெண்டிராயினும் யாவராயினும், அவ்வன்பர்களுக்கு எளியவன் என்பது இனிது புலனுகின்றது.

இந்தியாவில் வரி விஷயம்.

"மார்டன் ரிவ்யூ"வில் வித்வான் வி. என். வக்கீல் எம். ஏ. அவர்கள் எழுதியுள்ள வியாசத்தின் மொழிபெயர்ப்பு:—

பிரதான அரசாங்கத்தாராலும் மாகாண அரசாங்கத்தாராலும் சமீப வருஷங்களிற் சுமத்தப்பெற்றுள்ள அதிகமான வரி விதிதங்களால், பொது ஜனங்கள் மிகுதியும் கஷ்டத்துக்குள்ளாகி யிருக்கிறார்கள் என்பது பொதுவான அபிப்பிராயமாக இருக்

கிறது. அரசாங்கத்தார் இம்முறையை வருடந்தோறும் அதிகப் படுத்திக்கொண்டே வந்திருக்கிறார்கள்; இதனால் கஷ்டமதிகப்பட்டிருக்கின்றது; இதனோடு, செலவைக் குறைக்கும் விஷயமாக யோசனை சொல்வதற்கென்ற இன்ச்கேப் கமிட்டியும் ஒன்று ஏற்பாடாயிருக்கிறது. இந்த நிலைமையில் சில காலங்களாக வெவ்வேறு வருஷங்களில் நம்மீது சுமத்தப்பெற்றிருக்கும் வரி விதிதங்களைப்பற்றி யாராய்ந்து எழுதுதல், சமயத்துக் கேற்றதாக இருக்கும். வரிவிதித விஷயங்களை, கஅஎக-வது வருஷம் முதற்கொண்டு, சஅஅக, கசுகசு, கசுOக கசுகக-வரையும் எடுத்துக் காட்ட முயல்கின்றேன். பின்னும், யுத்த ஆரம்பத்துக்கு முன் வருஷமாகிய கசுகங-ம் வருஷமும் பயன் தருவதாகும். கசுஉக-வது வருஷ முதல், பிரதான அரசாங்கத்துக் கணக்குகளும் மாகாண அரசாங்கத்துக் கணக்குகளும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுப்போயின; சீர்திருத்தத்தின் முந்தியவருஷமாகிய கசுஉO-வது வருஷத்து விஷயமும் நமது ஆலோசனைக்குப் பெரிதும் பயன்தருமென் றெண்ணுகின்றேன். நிகழ்கிற கசுஉஉ-கசுஉங வருஷங்களின் விஷயங்களை நிர்த்தாரணம் செய்வதற்கு, நாம் வேறு முறையைக்காட்டி யதனையதன் தகுந்த இடத்தில் விவரிப்போம். முதன்முதலாக, வரி விதித்தலாவது என்ன என்பதும், அரசாங்கத்தாருடைய வருமான வகைகளில் எவை யெவை வரி விதித்தல் என்னும் வகையுடன் சேர்க்கப்படக்கூடும் என்பதும் கண்டறிதல் மிகுதியும் கஷ்டமாகத்தானிருக்கிறது. வரி விதித்தல் என்னும் விஷயத்தைப் பலபடியாகவிவரிப்பதைவிட்டு, அரசாங்கத்தாரால் வரிகளாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதான, நாட்டு வளப்பங்கள் எவை யெவை என்னும் பாகங்களைப்பற்றிப் பேசுவோம். அரசாங்கத்தாருடைய கசுஉO-கசுஉக வருஷக்கணக்கில்வருமானத் துறைகளாகக் கீழே குறிக்கப்பெறும் துறைகளைக் காண்கிறோம்.

(க) நிலவருமானம். (உ) அபினி. (ங) உப்பு. (ச) தபால் தந்திகளும் கோர்ட்டுக் கூலிகளும். (ரு) போதை வஸ்துக்கள். (சு) மாகாணவிதிதங்கள். (எ) கடற்றுறைகள். (அ) வருமான வரி. (கு) காடுகள். (கO) பத்திரப்பதிவு. (கக) கப்பம். (கஉ) தங்க

சாலைகள். (௧௫) நியாய இலாகாக்கள். (௧௬) பல கலப்புத்தாக்கள் (௧௭) இருப்புப்பாதைகள். (௧௮) நீர்ப்பாசனம் (௧௯) வேறு பொதுத் துறைகள். (௨௦) ராணுவத்துறைகள். வரிவிதித்தல் என்னும் விஷயத்துக்கேற்றவாறு நிலவருமானத்தை யாதொரு ஸந்தேகமுமின்றி வரிவிதித்தல் வகையில் சேர்த்துக் கொள்கிறோம். நிலவருமானம் வாடகை வகையைச் சேர்ந்ததா வரி வகையைச் சேர்ந்ததா என்னும் விவாதத்துக்கு இது இடமன்று; எந்த வகையைச் சேர்ந்தபடியாகவோ, அரசாங்கத்தார் தேசத்தவர்களின் செல்வத்திலிருந்து ஒரு பாகத்தை நிலவருமானம் என்பதன் மூலமாக எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்பது காட்டத் தகுந்த விஷயமாக இருக்கிறது; இவர்கள் எடுத்துக் கொள்ளாமற்போனால், அந்தப் பாகம் தேசத்தாரால் அநுபவிக்கப்பட வேண்டியதுதான். மாகாண விகிதங்கள் என்பதும், நிலத்தின்மேற் சுமத்தப்பெற்றதொன்றாகலின், நிலவருமானத்தின் வகையிலேயே சேர்த்துக் கொள்ளக் கூடியதொன்றுதான். நிலவருமானத்தைப் பற்றிப் பேசப்புகுங்கால், இந்திய அரசாங்கக் கணக்கு விவரத்தில் ஒரு அதிகமான பொருத்தமின்மையை எடுத்துக் குறிக்க வேண்டியிருக்கின்றது. நிலவருமானத்தின் ஒரு பாகமானது, வேறு மூலமாக மாகாணத்தில் ஏற்படுத்தப் பெற்றுள்ள நீர்ப்பாசனத் துறைக்குச் சேர்ந்ததாகச் சொல்லப்படுகின்றது. நீர்ப்பாசனத்துறைக் கணக்கையும், நிலவருமானத்தின் இந்தப் பாகத்துடன் சேர்த்து விட முயற்சி நடந்து கொண்டிருக்கின்றன. நீர்ப்பாசனத்துறைக் கணக்கில், உபயோகித்துக் கொள்ளப்பட்ட நீர்வசதிகளாக, ஜல விகிதக் கணக்குப்படி, வருமானங்கள் காணப்படுகின்றன. இதனுடன்கூட, நிலவருமானத்தின் ஒருபாகமும், நீர்ப்பாசனத்துறைக் கணக்கில் சேர்க்கப்படுகின்றது. வாய்க்கால்கள் குளங்கள் இவற்றின் அதிகத்தால், நிலவருமானத்தை யதிகப்படுத்தவும் முயற்சி நடந்து கொண்டிருக்கிறது; இது நிலவரும்படிக்கணக்கிலிருந்து குறைக்கப்பட்டு நீர்ப்பாசனத்துறையில் சேர்க்கப்பெறுகிறது. இம்முறை நடந்து ௧௮௭௭-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரையில் கொண்டிருக்கின்றது. இது சந்தேகமில்லாமல், நிலவருமானத்திலிருந்து சட்டசம்பந்தமில்லாமற் கழிக்கப்பட்டதாகி, கணக்கில்

வழக்குப் பொருந்தாவகையாய்ச் சேர்க்கப்பட்டதொன்றாகி யிருக்கிறது. நிலவருமானம் சிறு தொகையாகவும் நீர்ப்பாசன வருமானம் பெருத்ததாகவும் காட்டப்பட்டிருக்கிறது. இதுகொண்டு அரசாங்கத்தார், நிலவருமான வரியானது சிறிதுதான் உயர்க்கப் பெற்றிருக்கின்றது; அதாவது, விவசாயிகளின் பேரில் சுமத்தப் பட்ட சுமையானது அது உண்மையாயிருக்க வேண்டியதிலிருந்து குறைந்துதானிருக்கின்றதென்று சொல்லக்கூடும்; மற்றொரு வகையில், நீர்ப்பாசனத்துறைகளில் நாங்கள் அதிகம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோமாகையால்தான், மிகுதியும் பயனுடையவர்களாக இருக்கிறோம் என்றும் காட்டக்கூடும். ஒரு மாகாணத்தின் இலாகாக்களெல்லாம் ஒன்றுக்குள் அடங்கினவையேயாதலால், ஒரு இலாகாவுக்கு வந்துள்ள பயனானது, அதிகமாகவோ குறைவாகவோ, மற்ற இலாகாக்களுக்கும் வந்த பயனை யதிகரித்துத்தான் காட்டும். ஆகையால், நீர்ப்பாசனக் கணக்கில் சேர்க்கத்தகுந்த இந்த நிலவருமானத்தின் ஒரு பாகத்தையும் சுத்த நிலவரிக்கணக்குடனே சேர்த்துக்கொண்டு கணக்கிடுவோம். தவிரமல், நீர்ப்பாசனத்துறையிலிருந்தும் இதற்குச் சரியான பாகத்தைக் குறைந்துக் கணக்கிடுவோம்.

அபினி:—சீன தேசத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் நிலைமையினால், சமீப வருஷங்களில் அபினி சம்பந்தமான வருமானம் அதிகமாகக் குறைந்து போயிற்று; என்றாலும் முன் வருஷங்களில் இந்த வகையான வருமானத்தை நில வருமானத்துக்கு இரண்டாம் படிபாகத்தான் கொண்டிருந்தார்கள். அரசாங்கத்தார் முழு சுதந்தரத்துடன் இந்த அபின் வகையில் பெற்றுக்கொண்டு வரும் வருமானத்தின் இந்தப்பாகமானது, இந்த முழு சுதந்தரம் அவர்களுக்கில்லாத காலத்தில், பயிரிடுவோருக்கும் வியாபாரிகட்குமே கிடைத்திருக்கும். இந்த முழு சுதந்தரம் எடுக்கப்படுமானால், போட்டிமுறையான வேகத்தின் நிலைமையினால், அபினி விலையானது இறங்கியிருக்கும் என்பது உண்மை. ஆனால், கசகசா பயிரிடப் பெறும் இடமானது, ஒரு அளவுள்ள பாகத்துக்குள்ளேயே அடங்கியிருக்கிறது; அந்த நிலப்பரப்பு

அதிக அளவுக்கு ஆகாமற்படியும் இருக்கிறது. உண்மையாக, ஒரு காலத்தில் இந்திய அபினிக்குத் தேவையதிகமாக இருந்த காலத்தில், அரசாங்கத்தாரால், இதனைப் பயிரிடும் இடமானது அடிக்கடி அதிகமாக ஆக்கப்படவேண்டிய முயற்சிகள் எடுக்கப் பட்டு வந்தன; அதனால் பரப்பினளவு அதிகப்பட்ட நிலையில் ஆயிற்று. (கஅஅ௨-ம் வருஷத்து வரவு செலவுக் கணக்குப் படி கசக-வது பாரா) ஆகையினால், அரசாங்கத்தார், எந்தப் பரப்பினளவு வரையில், இந்த அபினி வகையில் வரும்படியைச் சம்பாதித்துக் கொண்டிருந்தார்களோ, அந்தப்பரப்பினால் வரும் லாபத்தைப் பயிரிடுவோரும் வியாபாரிகளும் அடைந்து கொண்டிருந்தார்கள் என்பது விளங்குகிறது. இதனாலேயே, வரி விதித்தல் என்னும் இவ்விஷயத்தில் அபினியும் ஒரு துறையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. என்றாலும் இந்தக் கொள்கைக்கிணங்க அபினி வரும்படியில், எவ்வளவு பாகம் வரி விதித்ததுடன் சேரும் என்று கணிப்பது கஷ்டமாயிருக்கிறது; ஆதலால், இந்த வருமான வகையை நமது கணக்கிலிருந்து நீக்கிவிடுவோம்.

மற்ற முக்யவருமானத் துறைகளாகிய, உப்பு, தபால் முதலிய தலைகள், (பத்திரங்கள்) போதை தரும் பொருள்கள், கடற்றுறைகள், வருமானவரி, பத்திரப் பதிவுகள் முதலியவற்றைப் பற்றிப் பேசினால், இவைகள் வரிவிதிதம்தரும் பொருள்கள்தாம் என்று வகுப்பதில் யாதும் கஷ்டம் தோன்றவில்லை. கப்பங்கள் என்பன இந்து ராஜாக்களால் அரசாங்கத்தாருக்கு அளிக்கப்படுகின்றன; அவைகள் பிரிட்டிஷ் இந்தியப் பிரஜைகளால் கொடுக்கப்படுகின்றனவல்ல; ஆகலின், நமது காரியத்துக்கு எடுத்துக்கொள்ளக் கூடியவையல்ல.

காடுகள்:—காட்டிலாகா மூலமாகப் பெறப்படும் வருமான விஷயத்தை யெடுத்துக்கொள்வோம். இந்த வகையில் வரும் வருமானத்தின் சில பாகம் வரிவிதிதக்கணக்குடன் சேர்த்தெண்ணப் படுவதாகும். அரசாங்கத்தார் காட்டிலாகாவின் முழுசுதந்தரத்தையும் பெற்றவர்களா யிருக்கிறார்கள்; அன்றியும் அதிலிருந்து எல்லாச் செலவும்போக வரும்படியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சக்தியுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். சமீப வருஷங்களில்,

இந்தத்தொகை நூற்றைம்பது லக்ஷத்திற்கு அதிகமாகவே ஆகின்றது. முந்திய வருஷங்களில் இந்த வகையில் வருமானம் குறைவாகவே இருந்தபடியால், இந்தத் துறையைப் பெருக்கியமைக்க வேண்டியிருந்தது; பிறகு இதன் மூலமான வருமானத்தை முக்யமானதாகவும் நிலைத்ததாகவும் கொண்டார்கள். நமது விஷயத்திலிருந்து இந்தத்துறையை விலக்கிவிட்டோமானால், நாம் தவறின வர்களாக ஆவோம்.

வட்டிகள்:—ஙியாயம் செலுத்தும் துறைகளின் வருமானம், பல கலப்புத்துறைகள், வேறுபொதுத்துறைகள், ராணுவத்துறைகள் ஆகிய இத்துறைகளைக் கவனிப்போம். இந்தத் தலைப்புகளினால் வரும் வருமானங்களெல்லாம், அந்தந்தத் தலைப்புடைய துறைகளிலுள்ள செலவுகளைக் குறைத்ததனாலுண்டாகும் வரவுக்கணக்குகளேயன்றி வேறல்ல. அரசாங்கத்தார் தாங்கள் கடனாக வாங்கியுள்ள தொகைகளுக்காக அவ்வவ்விடங்கட்கு முறையே வட்டி செலுத்துகிறார்கள்; இந்தக்கடன் தொகைகளிலிருந்து வெவ்வேறு ஸ்தல ஸ்நாபனங்கள் முதலியவற்றிற்கு முன் பணமாகக் கொடுத்து வட்டிபெறுகின்றார்கள். இந்தத்துறைகள் நாம் எடுத்துக்கொண்ட விஷயத்துக்குப் பொருந்தமில்லாதனவாகலின், இவற்றையும் தள்ளிவிடுவோம்.

கீழ்வருந்துறைகள் ஆலோசிக்கப்பட வேண்டுவன. தபால் தந்தித் துறைகள், தங்கசாலைகள், இருப்புப் பாதைகள், நீர்ப்பாசனத்துறைகள் என்னும் இவைகள் அரசாங்கத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பெற்ற வியாபாரத் துறைகளேயாகும். இவைகள் அவசியமாக வியாபார ஒழுங்குகளுடனே நடைபெற்று வருகின்றன. தனிமையான—சம்பள ரூபமான வருமானத்தை யுத்தேசித்தே அரசாங்கம் இவற்றில் சம்பந்தப்பட்டிருக்கின்றது. ஆகையினால், நாம் எடுத்துக்கொண்ட வரிவிதித விஷயத்துக்கு இவை பொருந்தினவையல்லவென்றாலும், அரசாங்கமானது இவற்றில் தனது முழுசுதந்தரத்தையும் பாராட்டி, உட்புகுந்து அவ்வத்துறைகட்குரிய எல்லாச் செலவுகளும் நீங்கிய முடிவான வரும்படியை, அவற்றுக்கு முன்உதவப்பெற்ற பெருந்தொகைக்குரிய வட்டியுடன்

பெருத்த லாபமாகக் கைக்கொள்ளுகிறது என்னும் உண்மை எப்போதும் மறத்தற்குரியதன்று; இதில் வரும் அதிக வரும்படியானது வரி விஷயத்துடன் ஒருவாறு சேர்த்துக்கொள்ளத் தகுதியுடையதேயாகும். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்துக்குப்பின் வரையில், இந்தத்துறைகளிலிருந்து, அரசாங்கத்தார் சிறிது லாபந் தானடைந்து கொண்டிருந்தார்களென்னும் விஷயம் அநேகமாக உலகமறிந்ததே. வெகுகாலங்கட்கு இருப்புப் பாதைத்துறைகள் அரசாங்கத்துக்குப் பெருஞ் சுமையாகவே இருந்ததாகவும் தெரிகின்றது. ஆனால், சமீபவருஷங்களில், இத்துறையிலிருந்து அரசாங்கமானது எல்லாச் செலவும் போகத் தனிப்பெரும் லாபத்தை யடைந்து கொண்டிருப்பதோடு மாத்திரம் நில்லாமல், இத்தகைய வருமானத்தைச் சாசுவத வரும்படியாகவும் எண்ணியிருக்கிறது. இதனால், தற்காலத்து வரவு செலவில் உள்ள கஷ்டங்கள் நிவர்த்தியாகிவிடும்போலும். ஒருகால், இந்தத்துறையினால் பெறப்படும் வரும்படிகள் இந்தத்துறைக்கே செலுத்தப்பட நேருமானால், அதாவது புதுப்புது இருப்புப் பாதைகளை ஏற்படுத்துவதற்குச் செலுத்தப்படுமானால், அரசாங்கமானது, இதனால் வரும் வரும்படிக்குப் பதிலாகப் பொதுஜனங்களின்மேல் புதுவரிகளை சுமத்தத்தான் வேண்டியிருக்கும். இத்தப்படியாலோசிக்கும்போது, இதனால் வரும் வருமானமும் வரி விதித்த விஷயத்துடன் சேர்த்துக்கொள்ளக் கூடியதாகவே இருக்கின்றது. இந்த விஷயத்தில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு விவாதங்கள் நிகழத்தான் செய்யும். ஆகையினாலேதான், ௧௯௧௧-ம் வருஷத்திலிருந்தே நாம் எடுத்துக் கொண்ட விஷயத்தைக் குறிக்கும்போது, இரு வகையாகக் குறித்து வந்திருக்கிறோம். வியாபாரத்துறைகளில் எல்லாச் செலவுங் கழித்த வருமான மொன்று; அப்படியல்லாத தொன்று. புதியசீர்திருத்தம் வந்தபின்னர், கணக்குத் துறைகளில் ஏற்பட்டிருக்கும் மாறுபாட்டினால், நிகழும் வருஷத்து வரவு செலவுத்திட்டத்தைச் சரியாகக் குறிப்பது கஷ்டமாகத்தானிருக்கும்; பிரதான—மாகாண அரசாங்கங்களின் வரவு செலவு வகைகளெல்லாம் நாமறியக் கூடுமாயின் அவை எளிதில் குறிக்கத்தகும். ஆயி

னும், ஒருவழி கொண்டு அதனை ஒருவாறு குறித்திடலாம். ௧௯௨௧—௧௯௨௨-ல் பிரதான—மாகாண அரசாங்கத்தாரால் எவ்வளவு தொகைபதிகமாக வரி விகிதத்தில் சுமத்தப் பட்டிருக்கின்றது என்னும் விஷயத்தைச் சுலபமாக அறிந்து கொள்ளலாம்; அப்படியறியப்படும் அந்தத் தொகையை, ஜனத் தொகையின் வகையில் பிரித்து எடுத்துக் கொண்டு, அந்தத் தனித்தனித் தொகையை ௧௯௨௦-ம் வருஷத்துக் கணக்கு வகைகளில் சேர்த்துக் கூட்டிறோமானால், ௧௯௨௨-ம் வருஷத்துக்கணக்கை ஒருவாறு அறிந்துகொள்ளக்கூடும். இந்த முறையால் வரும் கணக்கு, சரியான கணக்குவந்தபின் திருத்தக்கூடிய அளவிலிருக்குமென்பதிற் சந்தேகமில்லை; இருந்தாலும் வித்தியாசம் சில பைசாக்களின் அளவுக்குட்பட்டுத் தானிருக்கக்கூடும். ஜனங்கள்மேற் சுமத்தப்படும் வரிச்சுமையின் உண்மையான விகிதத்தை, ஒவ்வொரு தேசத்திலும், அந்தந்த தேசத்து ஜனங்களாற் செலுத்தப்பெறும் வரித் தொகைகளைக் கொண்டே தீர்மானிக்கிறது வழக்கமில்லை; ஆனால், வரி செலுத்திய பின் அந்த ஜனங்களுக்குக் கிடைத்திருக்கும் வருமானத்தைக் கொண்டுதான் தீர்மானிப்பது வழக்கம். ஒவ்வொரு நபரின் பேரிலும் சுமத்தப்பெறும் வரி விகிதமானது, ஒரு தேசத்தைவிட மற்றொரு தேசத்தில் அதிகமாகவும் இருக்கலாம்; ஆனால், இருதேசங்களின்வரித்தொகைகளும் ஒருபடியாகத்தோன்றினாலும், ஒரு தேசத்தில் வரி செலுத்தியபின் ஜனங்கள் பெறும் வருமானத் தொகையானது மற்றத் தேசத்தினதைக் காட்டிலும் பெருத்ததாகக் காணக்கூடுமானால், முன்னைய தேசத்தின் வரி விகிதமானது சிறிதென்றே கணக்கிடலாகும். ஒரு தேசத்தின் பின் வருஷ வருமானத்தைக் கணக்கிடுதல் அதிக சுலபமான காரியமன்று. இப்படிக்கணக்கிடும்முறையை ஒவ்வொருதேசமும் முயற்சி செய்து பார்த்திருக்கிறது. வரிகொடுக்கும் ஜனங்கள் தங்கள் வரவு செலவு கணக்கைச் சரியாக—தவறில்லாமல் காட்டாதிருந்தார்களாயின், அம்முயற்சி பயன்தருமா?

இந்த முறை இந்தியாவிலும் அடிக்கடி முயற்சிக்கப்பட்டிருக்கின்றது. பலபிரமுகர்களும் இந்தமுயற்சியுள் புகுந்து உழைத்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

௧௮௭௦-ம் ஆண்டிலும் பின்னும் ஸ்ரீமான் தாதாபாய் அவர்களால் முதன் முதலாக இந்த முயற்சி செய்யப்பட்டது. இந்தியாவின் தரித்திரமும், இந்தியாவில் பிரித்தானியாவுக்கு உரித்தாகாத அரசாட்சியும்என்னும் புத்தகம்; பக்கம் ௧--௨௫) அவர் ஒவ்வொரு மாகாணத்தின் வருஷ மாகுல்களைக் கணக்கிட்டிருக்கிறார். அவர் முதலில், நீர்ப்பாசனமுள்ள அதில்லாத நிலங்களையும் பயிரிடும் ஜாப்தாவில் எடுத்துக்காட்டியிருக்கிறார்; பிறகு தனித்தனி மாகுலையும் கணித்திருக்கிறார்; பிறகு மொத்த மாகுலைக் கணக்கிட்டிருக்கிறார். தற்கால விலைகளுக்கேற்ப அந்த விளைபொருள்களைப் பணமாகக் கணக்கெடுத்திருக்கிறார்; பிறகு பலவகைகளிலிருந்து பெறப்பட்ட இந்தியாவின், விவசாயமல்லாத பல வருமானங்களையும் கணக்கிட்டார்; கணக்கிடுவதில் நேரும் சில பிழைகளுக்காகப் பதில் செய்தும், தேசத்தின் வருஷ வரும்படியில் எத்துறையிலும் தான் தாழ்ந்த தரமாக மதிப்பிடவில்லை யென்பதையும் காட்டியுள்ளார். ௧௮௬௭-வது வருஷத்தின் கணக்குகளையும், சில முன்வருஷங்களின் கணக்குகளையும், ஒப்பிட்டுக் காட்டியிருக்கிறார். முடிவாக, இந்தியக் குடிகளில் ஒவ்வொருவருக்கும் வருஷ வரும்படியானது சராசரி ௪௦ ஷில்லிங் அல்லது ௨௦ ரூபாய் தான் ஆகிறது என்று தீர்மானித்திருக்கிறார். இவரைப் போலவே ௧௮௭௧-ம் வருஷத்தில், இந்தியாவுக்கு உதவிமந்திரி ஸ்தானத்தை வகித்திருந்தவராகிய ஸ்ரீமாந் கிராண்டு டப் என்பவர், காமன்ஸ் ஸபைக்கு முன்னிலையில் கணக்குக் கொடுத்தபோதும், பிரித்தானிய இந்தியாவில் வருஷவாரி சராசரி வரும்படியானது ஒவ்வொரு நபருக்கும் இரண்டு பவுன்கள்தானாகின்றன என்று கூறியிருக்கிறார். இதற்கு அடுத்தபடியில், ராஜப்பிரதிநிதியாயிருந்த ஸ்ரீமாந் லார்ட்மேயோ என்பவரும், இந்த திட்டத்தைச் சட்டசபையில் குறித்திருக்கிறார்.

௧௮௮௦-வது வருஷத்துப் பஞ்ச நிவர்த்தி விசாரணைக் கூட்டத்தாரும், இந்தியாவின் விவசாய மாகுல்களில் கணக்குகளைப் பற்றிக் குறித்திருக்கிறார்கள். ஸ்ரீமான் ஸர் டேவிட் பார்பர் என்பவர் ௧௮௮௧-வது வருஷத்தில் இந்த இலாகாவில் வேலை

செய்து கொண்டிருந்தார்; அவர், அந்த விசாரணைக் கூட்டத்தாரின் கணக்குகளில் உள்ள குற்றங்குறைகளை எடுத்துக் காட்டி, இந்தியாவின் ஒவ்வொரு மாகாணத்தின் விவசாயச் சாகுபடிக் கணக்குகளில் சில அவசியமான திருத்தங்களைச் செய்து காட்டியிருக்கிறார். பஞ்ச நிவர்த்தி விசாரணைக் கூட்டத்துக்குச் சார்பாக, இந்த விவசாய மாதுல்களை—ஆகாரத் தான்யங்களை ஒரு டன்னுக்கு ரூ. ௫௦ வீதமும், மற்ற தானியங்களை ஒரு ஏக்கருக்கு ரூ. ௩௦ வீதமும் விலை காட்டியிருக்கிறார்; பின்னும், அவர், இந்தியாவின் வருமானத்தை விவசாய மூலம் என்றும், அல்லாத மூலமென்றும் இரு பிரிவாகக் காட்டி, இந்த ஆஸ்திவாரத்தில் இந்தியாவின் வருஷவாரி சராசரி நபர் வரும்படி ரூ. ௨௭ என்றும் தமது தீர்மானத்தைக் காட்டியிருக்கிறார். ௧௯௦௧-ம் ஆண்டு, ஸ்ரீமான் லார்ட் கர்ஸன், இந்தியாவின் வருஷ வருமானத்தை நபர் வாரியாகக் கணக்கிட்டு, ஸ்ரீமான் ஸர் டேவிட் பார்பர் குறித்தது போலவே, நபருக்கு ரூ. ௩௦ தானென்று சட்ட சபையில் கூறியிருக்கிறார். ௧௯௨௧-ம் ஆண்டு, பிப்ரவரி, ௨௩-ம் தேதியில், கனம் ஸ்ரீமான் குக் என்பவர், மாகாண சபையில், ௧௮௮௧—௧௯௦௧-ம் வருஷக் கணக்குக் குறிப்பையே தொடர்ந்து இன்னும் சில திருத்தங்களைக் காட்டிக் கணக்கெடுத்து, ௧௯௩௧-ம் வருஷத்தில், சராசரி நபர் வரும்படி ரூ. ௫௦ என்று காட்டியிருக்கிறார்.

௧௯௦௧-ம் வருஷம் வரையில் சராசரி வரும்படியின்மேல் விதிக்கப்பட்ட வரி விகிதம் நூற்றுக்கு ௮-முதல் ௯-வரையில் பல திறப்பட்டிருக்கின்றது. ஆனால், ௧௯௩௧-ம் வருஷத்தில், ௯-க்குக் குறைந்திருக்கிறது. ௧௯௦௯-லிருந்து ௧௯௧௧-ல் வரி விகிதம் குறைந்திருக்கிறதென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆனால், முன் வருஷங்களைக் காட்டிலும் ௧௯௧௧-ம் வருஷத்தின் நபர்வாரியான சராசரி வரும்படியானது அதிகப்படுத்திக் காட்டியிருக்கிறதென்பது சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கக் கூடியதாயிருக்கிறது. ௧௮௮௧-ம் வருஷம் முதல் ௧௯௦௧-ம் வருஷம் வரையிலுள்ள இருபது வருஷங்களில், நபர் வாரியான வரும்படியானது வருஷத்துக்கு ரூ. ௨௦ அதிகமாகக் காட்டப்படுகிறது. ௧௯௧௧-ம் வருஷத்தில்

அதிகமாகக் காட்டப்பட்டிருக்கிற நபர் வாரி வரும்படிப் பெருந்தொகையாகிய ௫௦ ரூபாயின் மேல் கணக்கிட்டுப் பார்க்கும்போது, வரி விகிதம் குறைந்து தோன்றுகிறது இந்தக் கணக்குகளின் விவரங்கள் சரியாக வெளிவரப்பெறாதபடியால், நாம் கணக்கு முறை அதிகப்படுத்திக் காண்பிக்கப் பட்டிருக்கிறதென்று சொல்லும்படியாக இருக்கிறது.

௧௯௧௪ முதல் ௧௯௨௦ வரையிலுள்ள வருஷங்களாகிய யுத்த வருஷங்களில், நபர் ஒன்றுக்கு ரூ. ௨ வீதம் அதிக வரியும் போடப்பட்டிருக்கிறது. அடுத்த இரண்டு வருஷங்களில், அதாவது சென்றிருக்கும் வந்த இரண்டு வருடங்களிலும், இன்னும் அதிகமாக நபர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் அதிக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், யுத்த காலத்துக்கு முற்பட்ட வருடங்களைக் காட்டிலும் பிற்பட்ட வருடங்களில் வரி விகிதம் இரட்டிப்பு மடங்காக இருக்கின்றது. ௧௯௧௪-ம் வருடத்தின் விகிதப்படியே இன்றும் வரி விகிதம் ஏற்பட்டிருக்குமானால், இன்றைக்கு இந்தியரின் நபர் வாரி சராசரி வரும்படியானது வருடமொன்றுக்கு ரூ. ௧௧௦ ஆகவே ஆகும். இப்படி நமது வரும்படியானது அதிகப்படுத்திக் காண்பிக்கப்பட்டிருப்பது ஏன் என்னும் விஷயம் அறியப்பட வேண்டியதுதான். இதற்கு விவரங்களெல்லாம் அரசாங்கத்தார் கையில்தான் இருந்துகொண்டிருக்கின்றன; இத்தகைய அசாத்ய விஷயங்களை யெல்லாம் அரசாங்கத்தார் யாரும் அறிய விளம்பரப்படுத்தினார்களானால் பெரிய உதவியாகவே இருக்கும்.

முன் வருடங்களில் சராசரி வருடவரும்படி ஏன் குறைந்து காண்கிறது என்றாகிலும், பின் ௧௯௧௪-ம் வருடத்தில் ஏன் அதிகமாகக் காணப்படுகிறது என்றாகிலும் நாம் கேட்கவரவில்லை; இந்த அசாத்யமான விஷயத்தின் பெருங்கலக்கத்துள் நாம் புகாமல் மேற்குறிக்கப்பட்டிருக்கிற கணித விவரப்படி, வரி விகிதம் அதிகமாகவே சுமத்தப்பட்டிருக்கிறது என்னும் தீர்மானத்தை நாம் குறிக்காமலிருக்க முடியவில்லை. வரி விகிதமானது ஜனங்களால் தாங்க முடியாத அளவுக்கு உச்ச நிலைக்கு வந்துவிட்டது. இன்னும் அதிகப்பட்டால் தாங்கவும் முடியாது; அன்றியும் எல்லா நோக்கங்கட்கும் அது அறியாமையைத்தான் காட்டிநிற்கும்; இனி, அரசாங்கத்தின் செலவைக் குறைக்கும் வகையைத்தான் ஆரம்பிக்கவேண்டும். செலவைக் குறைப்பதென்று கூட்டப்பட்டிருக்கும் கூட்டத்தார் தங்கள் சக்தியை இப்போது காட்டுவார்களா?

பிரிட்டிஷ் இந்தியாவின் வரி நிகழ்ச்சி.

வரி விவரம்.	1871	1881	1891	1901	1911	1920
நிலவரி	2,05,200000	2,24,390000	2,46,380000	286515000	3,31,725000	34,83,11000
உப்பு	59,670000	73,750000	86,360000	89,085000	50,865000	6,76,45000
ஸ்டாம்பு	24,760000	33,810000	42,620000	51,090000	72,225000	10,95,68000
போதை வஸ்துக்கள் ...	23,690000	34,270000	51,170000	61,140000	1,14,135000	20,43,65000
மாகாண விகிதங்கள் ...		28,950000	35,020000	41,145000	8,22000	633000
மடற்றுறைகள் ...	25,760000	23,610000	17,010000	57,495000	97,020000	31,89,85000
வருமான வரி ...	8,250000	5,360000	16,520000	20,535000	24,780000	22,19,28000
பத்திரப் பதிவு ...		2,840000	3,990000	4,680000	6,675000	11,203000
ஆக மொத்தம் ரூ.	347330000	426980000	499070000	612285000	705645000	1282638000
திருப்பிக்கொடுத்தது ...	2860000	2720000	2540000	3360000	5025000	32389000
பாக்கி அசல் வரி ரூ.	344470000	424260000	496530000	608925000	700620000	1250249000
இந்திய ஜனத்தொகை	1850 லக்ஷம்	1980 லக்ஷம்	2210 லக்ஷம்	2310 லக்ஷம்	2440 லக்ஷம்	2470 லக்ஷம்
ஒரு ஆளுக்கு ஈவு ...	1—13—9	2—2—3	2—3—11	2—10—2	2—13—11	5—0—11

1922-ஷ உத்தேசப்படி ஆள் ஒன்றுக்கு வரி 6—4—3 ஆகிறது.

சதங்கை யொலி.

காரணமென்ன?

"வேலூரை யடுத்துள்ள சதுப்பேரியில் இருபத்தேழு ஹிந்துமக்கள் கிறிஸ்தவராகி விட்டனர்." இவர்கள் ஹிந்து மதத்தில் உண்மையில்லை யென்று கண்டு விட்டார்களா? கிறிஸ்தவ மதத்தின் தத்துவப் பெருக்கை யறிந்துவிட்டார்களா? இரண்டுமில்லை யென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். ஆனால் நாம் நமது மதத்தை நமது சகோதரர்கள் யாவரும் அறியும்படி நன்றாகப் புகட்ட முன்வாராதிருப்பதும், பல்லாயிரம் மயிலுக்கப்பாலிருக்கும் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் இங்கு வந்து மூலை முடுக்குகளில் காலமறிந்து சமயமறிந்து பிரசாரஞ் செய்து வருவதுந்தான் இந்துக்கள் கிறிஸ்தவராவதற்குக் காரணங்களாகும்.

இரங்குகிறோம்!

இம்மாதிரியாக இந்துக்கள் கிறிஸ்தவராகிற கதை நாடோறும் நிகழ்ந்து கொண்டு வருகின்றது. இப்படியாக மாறிக்கொண்டே சென்றால் நமது மதத்தின் கதி யென்னவாகு மென்பதைச் சமயாபிமானிகள் கருதுதல்வேண்டும். வரவரப் பலதுளி பெருவெள்ள மாகிவிடும். இந்த நிலையிலும் காலமறியாமல், குண்டுசெட்டியில் குதிரை யோட்ட விரும்பும் சில வரட்டு சாஸ்திரிகள், புறமதம் புகுந்தவர்களை மீட்டும் அழைத்துக்கொள்ளக் கூடாதென்று புலம்புகின்றனர். இவர்களது வைதிகத்துக்கு இரங்குகின்றோம். திருட்டுப்போன சொத்தைத் திருப்பிப் பெறுவதற்கு ஆட்சேபிக்க அறிஞர் ஒருப்படாரன்றோ?

மலாய் நாட்டில் ரப்பர்.

௧௩௩ ராத்தல் கொண்டது ஒரு பிக்கல். இதன்விலை முப்பதாக விருந்து இப்போது சில வாரங்களாக ஐம்பதுக்கு மேலேறி வருகின்றது. இதன் விலை வீழ்ச்சியால் மலாய் நாடு உயிரற்றுக் கிடந்தது. இப்போதுதான் கைகால் அசைவுண்டாகிறது. இந்த விலையுயர்வானது இயல்பாக உயர்ந்திருப்பதாக நிச்சயிக்க முடியவில்லை. கவர்மெண்டார் ஜனங்களைக் காப்பாற்ற வேண்டியது இன்றியமையாததாதலால் அவர்களின் பெருமுயற்சியால் விலை கொஞ்சந்தூக்கப்பட்டிருக்கிறதென் றெண்ண இடமில்லாமற்

போகவில்லை. F.M.S. கவர்மெண்டார் ரப்பர் பாலெடுப்பதைப்பற்றியும் ஏற்றுமதி செய்வதைப் பற்றியும் கட்டுப்பாட்டுச் சட்டம் செய்திருர்களாதலால் இயல்பாக ரப்பருக்குப் பிரியம் வந்துவிடவில்லை யென்பது நிச்சயம். ௧௯௨௨-ஆம் ஜனவரி௴ ௧௳ முதல் செப்டம்பர்௴ ௩௰௳ வரை, பேரா செலாங்கூர், நகிரிசெம்பிலான், பஹாங், என்ற நாலு கவர்ன்மெண்டுக்குட்பட்ட நிலங்களில் மட்டும் ரப்பர்பால் எண்பத்திரண்டு லட்சத்து நாற்பதாயிரத்து அறுநூற்றுஎண்பத்து மூன்று டன் எடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தில் இதே ஒன்பது மாதங்களில் ஐம்பத்து நாலரை லட்சம் டன்தான் எடுபெட்டிருக்கிறது.

லட்சம் ரூபாய்.

பரோடா மஹாராணியார் பரோடா சமஸ்தானத்திலுள்ள பெண்மக்களின் உயர்தரக் கல்வியபிவிருத்தியின் பொருட்டு ஒரு லட்சம் ரூபா நன்கொடையளித்திருக்கின்றார். இது ஒரு சிறந்த செய்தியேயாகும். நமது தமிழ்நாட்டிலுள்ள சீமாட்டிகள் சிலர் சேர்ந்து கொடுப்பதானல் இந்த ஒரு லட்சம் ரூபாய் பெரிதல்ல. ஆனால் அறிவும் தயாளமுமல்லவா வேண்டும்!

இரணிக்கோவில்.

நகரத்தாருக்குரிய கோவில்கள் ஒன்பதனுள் இக்கோவிலும் ஒன்றாகும். இதன் பணிமுதலியன திருத்தப் பெறவேண்டிய நிலையிலிருப்பதால் பணி செய்வதை முன்னிட்டு நாளிது ஐப்பசி-௴ ௪-௳ முதல் ௧௬-௳ வரை கூட்டம் நடைபெற்றது. இக்கோவிலின் உரிமையாளராக ஆயிரத்திருநூறு புள்ளிகட்கு அதிகமாக விருக்கின்றனர். புள்ளி ஒன்றுக்கு ரூ ௭ வீதம் வசூலிப்பதென்றும், அதற்குமேல் இயல்புக்குத் தக்கவாறு வசூலிப்பதென்றும், முதலில்சுமார் ஏழு லக்ஷம் ரூபா வரை வசூலித்துக் கோவிற் பணியைச் சிறப்புறச் செய்வதென்றும். இதனை யார் முன்னின்று நடத்துவதென்பதை வாலஸ்தாபனக் கும்பாபிஷேக காலத்திற் பேசிக்கொள்வதென்றும கோவில் பணி முற்றுப்பெறும் வரை வேறு எந்த விதமான வழக்கு மூட்டைகளையும் அவிழ்க்கக்கூடாதென்றும் பேசி முடிவு செய்திருக்கின்றனரென்று கேட்டு மிக மகிழ்ச்சியுறுகின்றோம். வழக்கு வரக்கூடிய வேறு விஷயங்களை இதற்கிடையில் பேசுவதில்லை யென்று பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது. பிள்ளையார்பட்டிக் கோவிலானது காரியத்தன யுத்தத்தால் கிடக்கும் நிலை இப்போது நமது ஞாபகத்துக்கு வருகின்றது. நிற்க, இரணியூர்க் கோவிலினுள் பல ரஹஸியங்களிருப்பதாகச் சொல்லப்பெறுகிறது. முன்னதாகவே ஒரு அஸ்திவாரமும் உள்ளது. ஆதலின் அந்தக் கோவிலை உள்ள அள

விலேயே அமைப்பது சாலச்சிறப்புடையதாம். ஊர்வலமாகச் சென்று வரி செலுத்தாமல் அனைவரும் கோவில் வாசலில் சென்று தங்களாகவே சீட்டெழுதிப்போவதென்று செய்திருக்கும் தீர்மானமானது உண்மையாளர்க்கு இன்பந் தருவதாகும்

தங்கப் பதக்கம்.

திருப்பூரில் நடைபெற்ற மாகாண மகாநாட்டின் சார்பில் கதர் பரீக்ஷை யொன்று நடைபெற்றது. அதில், நூல் நூற்பதில் மிகத்தேர்ச்சி பெற்றுள்ள நமது நண்பர் வேந்தன்பட்டி ஸ்ரீமாந் மு. சொக்கலிங்கஞ் செட்டியாரவர்கட்கு ஒரு தங்கப்பதக்கம் அளிக்கப்பெற்றது. மகாநாட்டின் முன்னர் பஞ்சு வெட்டி ராட்டினத்தைச் சுழற்றி அழகிய மெல்லிய நூலை நூற்றுக் காட்டினார்கள். நமது மாகாணத்தில் நூல்நூற்பதில் முதற்றரமாகத் தேறிய ஸ்ரீமாந் செட்டியாரவர்களை வாழ்த்துகிறோம். தேசீய விஷயங்களில் பின்னிற்கும் இராமநாதபுரம் ஜில்லாவாஸி யொருவர் கதர் நூலுக்கு முதற்றரப் பரிசு பெற்றிருப்பது நமது ஜில்லாவிற்கே ஒரு பெரும் கௌரவமாகுமல்லவா? ஸ்ரீமாந் செட்டியாரவர்கள் பலர்க்கும் கற்பிக்கத் தீவிரமாக முன்வருவார்களென்று நம்புகிறோம்.

தேசீய மகாநாட்டில் புலாலுணவு.

மார்கழி மாதத்தில் புண்ணிய க்ஷேத்திரமான கயா நகரிற் கூடும் நமது அகில இந்திய தேசீய மகாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளின் சௌகர்யத்திற்காக புதிதாக ஏற்பாடாகும் "சுயராஜ்யபுரி" யில் புலால் விற்பதற்கு ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறதென்று அதன் உபசாரணைச் சபையார் அறிவிக்கிறார்கள். அஹிம்ஸா தருமமே உருவான காந்தியடிகள் பெயரைச் சொல்லிக்கொண்டு மகாநாடு கூடுகிறது. எவருடைய வாயும் "அஹிம்ஸை" யென்ற சொல்லைச் சொல்லுகின்றது. ஆனால் உபசாரணைச் சபையார் ஆடு முதலிய எளிய பிராணிகளைக் கொன்று உரித்து வியாபாரஞ் செய்ய ஏற்பாடு செய்கின்றனர்! அஹிம்ஸா தருமத்தை மனிதர்கட்குத்தான் மட்டுங் கவனிப்பதோ? வாயில்லாப் பிராணிகளைக் கொல்லுவது அஹிம்ஸா தருமமாகுமோ? மகாநாடு நடைபெறுகிற நான்கு தினங்கட்குப் புலாலின்றி அங்கு வரும் மக்கள் பொறுக்கமாட்டனரோ? அப்படியானால் மகாநாட்டு உபசாரணைச் சபையார் நாறப் புன்புலால் வியாபாரஞ் செய்தல் அவசியந்தானோ? மகாத்மாவை உண்மையாக அறிந்துள்ள ஜீவகாருண்ய சீலர்கள் நமது மாகாணக்கமிட்டி மூலம் பிரசாரஞ் செய்வார்களா?